இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 15 | திகதி : 07.11.2021 | விலை : 30.00

## போரினால் இறந்தோரை நினைவு கூர வடக்கு – கிழக்கு ஆயர்கள் பேரவை அழைப்பு

நவம்பர் 20 சனி

வடக்கு - கிழக்கு ஆயர்கள் பேரவை கடந்த 30 வருடகால உள்நாட்டுப்போரில் இறந்துபோன அனைவரையும் நினைவுகூர அழைப்புவிடுத்து வடக்கு - கிழக்கு ஆயர்கள் ஒப்பமிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது அவ் அறிக்கையாவது:

இலங்கையில் நடைபெற்ற 30 வருடகால உள்நாட்டுப் போர் காரணமாக எமது மக்கள் அனைத்து விதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது இன்னுயிரைப் பறிகொடுத்தோர், தங்களது உடன் பிறப்புக்களை, உறவுகளை இழந்தோர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், யுத்த வடுக்களால் அங்கவீனமுற்றோர், தொடர்ந்தும் எது விதமான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாது சிறையில் வாடுவோர், உடமைகளையும், இல்லிடங்களையும்,காணிகளையும் வாழ்வாதாரங்களையும் இழந்தோர், உயிர் அச்சுறுத்தல் காரணமாக அரசியல் தஞ்சம் தேடிப் புலம்பெயர்ந்தோர் எனப் பலதரப்பட்ட மக்களை நாம் குறிப்பிடலாம். இறந்தோரை நினைவு கூர்ந்து அவர்களுக்காக இறைவேண்டல் புரிகின்றமை ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் வந்தாலும் இந்த முயற்சிக்குப் பல கோணங்களிலிருந்தும் பல தடைகள் இன்று வரையில் இருந்து வருகின்றமை நோக்கத்தக்கது.

இந்நிலையில் இலங்கைத் தேசத்தில் நடைபெற்ற கொடிய போரினால் இறந்து போனவர்களையும், அதன் விளைவாகப் பாதிக்கப்பட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து இறைவேண்டல் புரிய வடக்கு-கிழக்கு மாகாண கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் நவம்பர் மாதத்தில் வருகின்ற மூன்றாம் சனிக்கிழமையைத் தீர்மானித்துள்ளோம். இதன்படி இவ்வருடம் நவம்பர் 20 திகதி சனிக்கிழமையை போரினால் இறந்தவர்களுக்காக மன்றாடுகின்ற சிறப்பு நாளாகச் சிறப்பிப்போம். அன்றைய தினம் போரில் ஈடுபட்ட தரப்பினர், போரினால் இறந்துபோன மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், அரச பணியாளர்கள். பொதுமக்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து இறைவேண்டல் புரிய ஆயர்களாகிய நாம் அழைப்பு விடுக்கின்றோம். இதற்கெனக் குறிப்பிட்ட இடமும் இல்லை, நேரமும் இல்லை. அன்றைய தினம் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகளில் மக்கள் ஈடுபடவும் இல்லங்களில் தீபம் ஏற்றி இறைவேண்டல் புரியவும் அன்போடு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இவ்வழைப்பை வடக்கு-கிழக்குக் கத்தோலிக்க ஆயர்களாக நாம் எம்மக்களுக்கு விடுத்தாலும் சமயங்களைக் கடந்து அனைத்து சமயத் தலைவர்களையும், தமிழ்கூறும் நல்லுலகையும் அன்போடு அழைத்து நிற்கின்றோம். எமது இந்த முன்னெடுப்பு வெற்றியளிக்க அனைவரது ஆதரவையும் வேண்டி முடிக்கின்றோம்.

## "ஒரே நாடு ஒரே சட்டம்" புதிய அரசியல் யாப்பு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நிலைப்பாடு

“ஒரே நாடு ஒரே சட்டம்” எனும் புதிய அரசியல் யாப்பு மட்டில் இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது அவ் அறிக்கையாவது :

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது ஆளும், எதிர்க்கட்சி கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பை தொடர்ந்து எமது நாட்டில் ஜனநாயக விழுமியங்கள் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள சரிவுகள் பற்றி தனது அக்கறையான கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் தேர்தலுக்கு முன்பும் பின்பும் வாக்குறுதி அளித்த போதிலும் 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் சேர்க்கப்பட்ட புனிதமற்ற சூழ்ச்சியான விடயங்கள் புதிய அரசியல் யாப்பு உருவாக்குவதில் பின்னடைவை கொண்டுவந்துள்ளது. அது நாட்டின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் விதத்தில் எல்லையை மீறி செயல்படுகின்றது.

அரசியலமைப்புக்கு அமைவாக நிர்வாகத்தில் “ஒரே நாடு ஒரே சட்டம்” என்பதை யாரும் எதிர்க்கவில்லை. இருந்தபோதிலும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சட்டமன்றத்தை எவ்விதத்திலும் தொடர்புபடுத்தாமல் மிகவும் சொற்பமான இதனுடன் தொடர்பற்ற ☛ 02

## இந்திய மீனவர்களால் பாதிக்கப்படும் கடற்தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க வடக்கு – கிழக்கு ஆயர் மன்றம் முயற்சி

இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பால் கடற்தொழிலாளர்கள் அனுபவிக்கும் பாதிப்புக்களுக்குத் தீர்வுகாணும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் தெரிவித்துள்ளது. கடந்த 20-10-2021 புதன்கிழமையன்று வவுனியா, வேப்பங்குளம் தூய திருச்சிலுவைக்கன்னியர் மடத்தில் நடைபெற்ற நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் ஆயர்கள், குருமுதல்வர்கள் அடங்கிய வடக்கு-கிழக்கு ஆயர் மன்றக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் பிரச்சினை முன்னுரிமைப்படுத்தப்பட்டு ஆராயப்பட்டது.

இவ்விடயத்தில் இந்திய தமிழ்நாடு கடற்தொழிலாளர்களின் ஆக்கிரமிப்பு இருப்பதால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இதனைத் தமிழ்நாடு ஆயர் மன்றத்தினதும், தமிழ் நாடு முதலமைச்சரினதும் கவனத்துக்குக் கொண்டுவந்து இவ்விரு தரப்பினரோடும் இணைந்து செயற்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையில் முதற்கட்டமாக மீனவர்களின் பிரச்சினைகளை விளக்கும் கடிதங்கள் தமிழ்நாடு ஆயர் மன்றத்திற்கும், தமிழ் நாடு முதலமைச்சருக்கும் விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

## தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து மேய்ப்புப் பணி மாநாடு நடாத்த வடக்கு – கிழக்கு ஆயர் மன்றம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் இணைந்ததான மேய்ப்புப் பணி மாநாடு ஒன்றை வருகிற ஆண்டு நடாத்த வடக்கு-கிழக்கு ஆயர் மன்றத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது இம்மறைமாவட்டங்களில் நடைபெற்றுவரும் உலக ஆயர்மன்றத் தயாரிப்புப் பணிகளில் பெறப்படவுள்ள தரவுகளின் அடிப்படையில் இம் மேய்ப்புப்பணி மாநாடு ஒழுங்கமைக்கப்படும். குறிப்பாக இலங்கையின் தமிழ்த் திரு அவையின் இருப்பு, வளர்ச்சி, ஒன்றிணைந்த செயற்பாடுகள் ஆகியவைபற்றி இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளன.

நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் ஆயர்களும், குருக்கள் துறவியரின் பிரதிநிதிகளும், பொதுநிலைப்பிரதிநிதிகளும், துறைசார் பிரதிநிதிகளும் பங்குபற்றவுள்ள இம் மேய்ப்புப் பணி மாநாடு வருகிற ஆண்டு உயிர்த்த ஞாயிறுக்குப் பின்னர் நடாத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும், இதற்கான தேதிகள், இடங்கள் பற்றி பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் வடக்கு-கிழக்கு ஆயர் மன்றத்தின் செயலாளரும் யாழ்ப்பாணம் மறைமாவட்டக் குருமுதல்வருமாகிய அருட்பணி P.J. ஜெபரட்ணம் அடிகள் யாழ். மறை அலைத் தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

## ஐரோப்பிய ஒன்றியத் தூதுவரும் வட ஆளுநரும் யாழ். ஆயருடன் சந்திப்பு



இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் திரு டெனிஸ் சபி (Denis Chaibi) அவர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களைக் கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்தார். இச்சந்திப்பில் வடக்கின் தற்போதைய நிலைபற்றி அவர் ஆயருடன் கலந்துரையாடினார்.

மேலும் வடமாகாண புதிய ஆளுநர் திரு. ஜீவன் தியாகராஜா அவர்களும் அன்றைய தினம் மாலையில் யாழ். ஆயரைச் சந்தித்து யாழ் குடாநாட்டின் தற்போதைய நிலைமை பற்றியும் அவர் மேற்கொள்ள இருக்கும் பணிகள் பற்றியும் ஆயருடன் கலந்துரையாடி ஆயரின் ஆசீரையும் பெற்றுக்கொண்டார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## போரினால் இறந்தோரை நினைவுகூர வழி சமைக்கும் வடக்கு கிழக்கு ஆயர் பேரவை

நவம்பர் மாதத்தில் இறந்த நம்பிக்கையாளர்களை நினைவு கூர்ந்து அவர்களின் ஆன்மாக்களுக்காக மன்றாடுவதும், அவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதும் கத்தோலிக்கர்களாகிய எமது கடமையாகும். கடந்த முப்பது ஆண்டுகால வரலாற்றில் பல்லாயிரக்கணக்கான எம் உறவுகள் விடுதலைப் போராட்டத்திலும், இயற்கை அனர்த்தத்திலும் இறந்து போனமை மிக வருத்தத்திற்குரியது. இவ் இன்னுயிர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காக மன்றாடுவது எம் கடமைப்பாடாகும்.

தாய்நாட்டின் விடுதலைக்காகப் போராடித் தமது உயிர்களை ஈந்த வீரர்களை நினைவு கூர்ந்து நவம்பர் மாதத்தில் அஞ்சலி செலுத்தும் வழக்கம் தமிழர் பிரதேசத்தில் இருந்து வருகின்றது.

புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகளும் இந்நாட்களில் போரில் விடுதலைக்காகப் போராடி இறந்து போனவர்களை நினைத்து அஞ்சலி செலுத்தி வருவதும் வழக்கமே. இருப்பினும் இந் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எம் நாட்டில் தற்போது தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் போரினால் இறந்த தம் உறவுகளை நினைத்து மன்றாடக்கூடச் சுதந்திரம் இல்லா நிலையுள்ள இக்காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு ஆயர்கள் ஒன்றாகப் போரினால் இறந்தோருக்காக செபிக்க ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் மூன்றாம் வார சனிக்கிழமையில் இறைவேண்டல் செய்ய அனைத்து மக்களையும் வேண்டி நிற்பது வரவேற்கக்கூடிய ஒரு விடயமாகும்.

தமது இன்னுயிர்களைப் பறிகொடுத்தோர், தமது உடன்பிறப்புக்களை உறவுகளை இழந்தோர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், யுத்த வடுக்களால் அங்கவீனமாக்கப்பட்டோர், குற்றம் காணா நிலையில் சிறையில் வாடுவோர், உயிர் அச்சுறுத்தலால் புலம் பெயர்ந்தோர், இல்லிடங்களையும், காணிகளையும், வாழ்வாதாரங்களையும் இழந்து பரிதவிப்போர் இவர்களுக்காக கார்த்திகை 20 ஆம் திகதி மன்றாடுவோம்.

அதேவேளை, பலருடைய எதிர்ப்புகள், விமர்சனங்களுக்கு மத்தியில், அதுவும் பதினொரு வருடங்களின் பின்னர் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்துமாறு கோரி தமிழ்த்தேசியக் கட்சிகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடலில் ஈடுபட்டன. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் 1987 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்திய இலங்கை அரசுகளிடம் கோரவுள்ளதாகக் கூட்டத்தில் பங்குபற்றிய பிரதிநிதிகள் கூறியிருக்கிறார்கள்

13 ஆவது திருத்தச் சட்டம் கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையில் இருந்தபோதும், அதனை அவ்வப்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் உரிய முறையில் நடைமுறைப் படுத்த விரும்பவில்லை. மாறாக அதில் இருந்த காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்களைக் கொழும்பு கையாண்டு வருகின்றது.

13 ஆவது திருத்தச் சட்டம் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கான நிரந்தரத் தீர்வல்ல என்று அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட பல தமிழ்த் தலைவர்கள் எதிர்ப்பு வெளியிட்டிருந்த நிலை யில், தற்போது அதுவும், 2009 ஆம் ஆண்டு போர் இல்லாதொழிக்கப்பட்டு பதினொரு ஆண்டுகள் சென்றுவிட்டதொரு சூழலில் மீண்டும் 13 பற்றிப் பேசப்படுகின்றது. எவ்வாறாயினும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தி நிரந்தர அரசியல் தீர்வுக்கான ஆரம்ப முயற்சியாக மாற வேண்டுமென மன்றாடுவோமாக.

# பக்தி உணர்வு பூர்வமாக நடைபெற்று முடிந்த திருச்செபமாலைத் திருயாத்திரை

எமது நாட்டையும் முழு உலகையும் பாதித்துள்ள கொரோனாப் பெருநதொற்றிலிருந்து விடுதலை பெற அன்னை மரியாவின் பரிந்துரையை மன்றாடுவதற்காக இலங்கை ஆயர் பேரவையின் ஏற்பாட்டில் ஒழுங்குசெய்யப்பட்ட நாடளாவிய ரீதியிலான திருச்செபமாலைத் திருயாத்திரை மிகவும் சிறப்பாகவும், பக்தியோடும் உணர்வு பூர்வமாகவும் நடைபெற்று முடிந்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 2ம் திகதி காலி மறைமாவட்டத்தின் மாத்தறை மாதா திருத்தலத்தில் ஆரம்பமான இத் திருயாத்திரை இலங்கையின் 12 மறைமாவட்டங்களிலுமுள்ள பிரசித்திபெற்ற மரியன்னையின் திருத்தலங்கள் ஊடாகப் பயணித்துக் கடந்த 30ம் திகதி மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னை திருத்தலத்தில் நிறைவுபெற்றது. 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனைத்துப் பங்குகளிலும் நன்றித்திருப்பலிகளும் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

அனைத்து மறைமாவட்டங்களின் திருவழிபாட்டு இயக்குநர்களும், சமூகத்தொடர்பு இயக்குநர்களும் தேசிய திருவழிபாட்டு ஆணைக்குழுவோடும், சமூகத் தொடர்பு ஆணைக்குழுவோடும் இணைந்து இத் திருச்செபமாலைத் திருயாத்திரையை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தில் சாட்டி சிந்தாத்திரை மாதா, பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை திருத்தலங்களிலிருந்து இத் திருச்செபமாலைத் திருயாத்திரை நிகழ்வுகள் ஒளிபரப்பப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகமும் திருமறைக்கலாமன்றமும் இணைந்து நடாத்திய இளையோருக்கான பயிற்சிப்பட்டறை



சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகமும் திருமறைக்கலாமன்றமும் இணைந்து நடாத்திய இளையோருக்கான பயிற்சிப்பட்டறை கடந்த 18ம் திகதி திங்கட்கிழமை நக்கா வீதியில் அமைந்துள்ள கலைத் தூது கலாமுற்றத்தில் நடைபெற்றது. காலை 9மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை நடைபெற்ற இப்பயிற்சியில் ஆளுமை விருத்தி, தலைமைத்துவப் பண்பு, ஊடக அறிமுகம் ஆகியவை பற்றிய உரைகளுடன் குழுச்செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துக்குமான பணியக இயக்குநர் அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு றமேஸ் அடிகளும் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் திரு யோண்சன் ராஜ்குமார் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை உளவளத் துணையாளர் திரு நவராஜ் அவர்களும் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஊடக இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் அடிகளும் வளவாளராக வருகை தந்து இளையோரை வளப்படுத்தி இருந்தனர். கோவிட்19 சுகாதார விதிமுறைக்கு அமைவாக நடைபெற்ற இந் நிகழ்வில் 30 வரையான இளையோர் கலந்து பயனடைந்து கொண்டனர்.

# திருத்தந்தையின் நவம்பர் மாத இறைவேண்டல் கருத்து

களைப்பு, மனச்சோர்வு போன்றவைகளால் துயர்களை அனுபவிக்கும் மக்களுக்காக இந்த நவம்பர் மாதத்தில் சிறப்பானவிதத்தில் இறைவேண்டல் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அதிகப்படியான பணி, பணித்தொடர்புடைய மனஅழுத்தம் போன்றவை, பலரின் மனச்சோர்வுக்குக் காரணமாகியுள்ளன என, தன் நவம்பர் மாத செபக் கருத்தில் கூறியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இதனால் இவர்கள் மனதளவிலும், உணர்வளவிலும், உடலளவிலும் சோர்வை சந்திக்கின்றனர் எனக் கூறியுள்ளார்.

இன்றைய வாழ்வின் கடினமான சுழற்சிநிலைகளின் சோர்வால், கவலைகளும், அக்கறையின்மைகளும், ஆன்மீகச் சோர்வுகளும் பிறந்துள்ளன எனக் கூறியுள்ளது டன், மனச்சோர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோருக்கு அருகிருந்து, அவர்களின் வாழ்வில் நம்பிக்கையூட்ட முயலவேண்டும் என விண்ணபித்துள்ளார்.

மனச்சோர்வுக்கு உள்ளாகியிருப்போர், வாழ வழிதேடி அலைவோர், நம்பிக்கையிழந்தோர் ஆகியோருக்கு வெறும் வார்த்தைகளால் ஆறுதல் சொல்வதைத் தவிர்த்து, முதலில் அவர்களின் குரலுக்கு செவிமடுக்க முன்வருவோம், என்ற அழைப்பையும் முன்வைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நம்மைச் சுற்றியிருப்போருக்காக செபித்து, அவர்கள், தங்கள் வாழ்வை ஏற்று நடத்த உதவியாக இருப்போம் என்ற விண்ணப்பத்துடன், தன் செய்தியை, நிறைவுசெய்துள்ளார் திருத்தந்தை.

## ஒளிமுகம் மறைந்து ஒன்பது ஆண்டுகள்

பிறப்பு 12 . 10 . 1979



இறப்பு 14 . 11 . 2012

குருத்துவம் 18.05.2011

அமரர்

**அருட்பணி கீதபொன்கலன் லக்ஸ்மன்**

பெற்றவர்கள் தமை மறந்து ஊர் உறவு நாம் துறந்து
அறுவரையும் உயர்த்திவிட அரும்பெரும் பாடுபட்டு
கண்ணீரையும் காயங்களையும் நெஞ்சோடு தாம் சுமந்து
பட்டு வந்த வலிகள் பெரும்பலன் தாம் காண
பல்லாண்டு காலம் பல்வேறு தவம் புரிந்து
குருவாக உமைக்கண்டு பட்ட தன்பம் தாம் மறக்க
பெற்றவர்க்கு பெருமகிழ்வு சேர்த்து விட்ட மகிழ்வில்
உடன்பிறந்த சோதரர் நாம் உளம் நிறைந்து நின்றபோது
வழிகாட்டி எம்மை வாழ்வித்த செல்வம் நீர்
உம் வரலாற்றை நிறைவு செய்து இறைவனிடம் சென்று
ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்து
உம் வெற்றிடம் எம்மிடம் நிரந்தரமானாலும்
இறைவனுடனான உம் உடனிருப்பு எமக்குப் பலம் சேர்க்க
காலச் சக்கரத்தில் கைகோர்க்க நாம் வருவோம் எம் உறவே
இறைவனில் அமைதி கொள்ள
இடைவிடாது
வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

# ஒரே நாடு ஒரே சட்டம்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தனிநபர்களை ஜனாதிபதி செயலணிக்கு வர்த்தமானி மூலம் நியமித்தது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயமாகும். இவ்வாறான ஒரு மிக முக்கியமான விடயத்தில் பாராளுமன்ற செயற்பாடுகள் புறக்கணிக் கப்பட்டுள்ளது.மேலும் "ஒரே நாடு ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவை நடைமுறைப்படுத்துவதற்கான ஆராயும் குழுவில் சிறுபான்மையினரான தமிழர் இந்துக்கள், கத்தோலிக்கர்கள் கிறிஸ்தவர்களுடைய பிரதிநிதித்துவம் இல்லாதது அர்த்தமற்ற செயற்பாடாகும். இன்னுமாக கடந்த காலப் பதிவுகளைக் கருத்தில் கொள்ளாமல் ஒருவரை இந்த ஜனாதிபதி செயலணிக்குத் தலைவராக நியமித்து இருப்பது வேதனை அளிப்பதாக இருக்கிறது. ; குறித்த வர்த்தமானி நீக்கப்பட வேண்டும் என்றும் எல்லாக் குடிமக்களும் சட்டத்திற்கு முன் சமமாக நிற்கும் உத்தரவாதம் கொடுக்கக்கூடிய புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பது எமது கருத்தாகும் என அவ்வறிக்கை அமைகின்றது.


## கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு

- திருப்பலி ஆடைகள்
- திருப்பலிப் பண்டங்கள்
- மோட்சபாதை
- செபக் கைநூல்கள்
- திருச்சொரூபங்கள்
- திருப்படங்கள்
- திருவருகைக்கால மெழுகுவர்த்திகள்

# "கூட்டொருங்கியக்கம்" பற்றிய உலக ஆயர்கள் மாமன்றம் ஒன்றிப்பு

**அறிமுகம்**

தற்காலத்தில் நாம் எதிர்கொள்ளும் கொரோனாப் பெருந்தொற்றானது மீண்டுமொரு முறை நாம் அனைவரும் ஒரு உலகளாவிய சமூகமாக வாழ்கின்றோம் என்ற உணர்வை எம்மத்தியில் உருவாக்கியுள்ளது. நாம் அனைவரும் ஒரே படகில் பயணம் செய்யும் பயணிகள், எனவே ஒருவருடைய தனிப்பட்ட பிரச்சினையும் எமது பிரச்சினை என்ற மனநிலை ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது. நாம் அனைவரும் ஒன்றாகத்தான் மீட்பை நோக்கி நடைபயில அழைக்கப்பட்டுள்ளோம். அதேவேளை இத்தொற்றால், அனைத்து சமூகத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட சமநிலையற்ற அமைப்புக்கள், சமநிலையின்மைகள் அனைத்தும் எளிதாக வற்றிப்போக ஆரம்பித்துள்ளன. எனவே ஒன்றிப்பு (Communion) என்பது மீண்டும் மனித இருப்பின் அடிப்படையான தேவையாக இன்று உணரப்படுவது கண்கூடு, ஒன்றிப்பின்மை மனித இருப்பின் கேள்விக்குறியாக மாறும் நிலை உருவாகிவிட்டது. ஒன்றிப்பானது இறைவனின் இதயத்தின் அழைப்பாக இருக்கின்றது. இவ்வழைப்பின் குரலானது இந்நாட்களில் அதிக சத்தத்தோடு எமது செவிகளில் விழுவதைக் காணலாம். நடைபெற இருக்கின்ற உலக ஆயர்கள் மாமன்றத்தின் முப்பெரும் தூண்களில் ஒன்றாக விளங்கும் ஒன்றிப்பானது அதன் அத்தியாவசியத் தன்மையை எமக்கு வலியுறுத்துகிறது. ஒன்றிப்பு என்பது மனிதன் தன்னைப் படைத்தவரோடும் தன் சக படைப்புகளோடும் ஒன்றித்து வாழ்வதேயாகும்.

**இறை வார்த்தை ஒளியில்**

கடவுள் மனிதனைத் தம் உருவிலும் சாயலிலும் படைத்தார் எனத் தொடக்க நூல் (தொட. 1: 26) எமக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறது. அவன் கடவுளின் கைவண்ணமாக இருக்கின்றான். அவனுக்கென்று ஒரு இலக்கு இருக்கிறது. அவ்விலக்கை அவன் தனித்து அடைந்துவிட முடியாது. மனிதன் ஓர் சமூகப் பிராணியாவான். மற்றவர்களோடு இணைந்து தான் தனக்குரிய இலக்கை அடைய வேண்டியவனாயிருக்கின்றான்.

இவ் ஒன்றிப்பானது கடவுளது திருவுளமாக அமைகின்றது. இவ் ஒன்றிப்பின் சிதைவுக்கு மனித பாவப் பிறழ்வு மூலகாரணமாக அமைந்துவிடுகிறது. இருந்த போதிலும் கடவுள் தன் இரக்கத்தினால் மனிதனை மீட்டு உலகில் ஒன்றிப்பையும் ஒற்றுமையையும் மீண்டும் மீண்டும் நிலை நாட்டுகிறார்.

**பழைய ஏற்பாடு**

பழைய ஏற்பாட்டில் ஒன்றிப்புக்கே கடவுள் ஆபிரகாமையும் அவர் வழி மரபினர்களையும் அழைக்கின்றார். அவர் ஆபிரகாமைத் தனியே அழைக்கவில்லை மாறாக ஓர் குழுவையே அழைக்கின்றார். மேலும் சீனாய் மலையில் முதல் குழுவை (First Assembly) இறைவன் சந்தித்து அவர்களுடன் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்துகின்றார். இது இறைவன் மனிதனுக்குக் கொடுத்த குழு வாழ்வு அழைப்பை (Synodal vocation) கோடிட்டுக் காட்டுகின்றது. மோயீசனூடாக இறைவனே மக்களின் தலைவராக இருந்து மக்களை ஓர் குழுமமாக வழிநடத்துகின்றார். அவர்கள் குழுவாக வாழ ஓர் புதிய இதயத்தையும் அவர்களுக்கு அளிக்கின்றார்.

**புதிய ஏற்பாடு**

தனது போதனை வாழ்வு மூலம் தந்தையாம் கடவுள் தனது ஒன்றிப்பில்




இருக்கிறார் என்று இயேசு வாழ்ந்து காட்டினார். நற்செய்தி நூல்கள் இயேசு எவ்வாறு தந்தையாம் இறைவனின் ஒன்றிப்பில் நிலைத்திருந்தார் என்பதைப் பல நிகழ்வுகள் மூலம் தெளிவு படுத்துவதை நாம் அறிந்து கொள்ளலாம். இயேசு தனித்து இயங்கவில்லை. எப்போதும் தந்தையுடன் இணைந்து அவரின் திருவுளத்தையே நிறைவேற்றினார்.

**இயேசுவின் செபம்**

"எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக. தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" என்கின்ற இயேசுவின் இறைவேண்டுதலானது ஒன்றிப்பின் முக்கியத்துவத்தை தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புவதைக் காணலாம். இயேசுவை மூலைக்கல்லாகக் கொண்ட திருஅவையும் ஓர் குழுமமாகும். திருஅவையானது உயிர்வாழும், துடிப்புள்ள

**அருட்தந்தை ம. டேவிற்**

படிமமாக (Living Icon) இன்றைய உலகில் திகழ்கிறது. எம்மாவுஸ் பயணம் என்பது திருச்சபை ஓர் குழுமம் என்பதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும். குழுமப் பயணத்தில் உயித்த யேசு வார்த்தையினாலும் திருவிருந்தினூடாகவும் பேசுகின்றார்.

தூய ஆவியானவர் பல்வேறு கொடைகளைக் கொண்ட மனிதர்களைக் கொண்ட குழுமத்தை ஒன்றிணைத்து பயணிக்க வைக்கின்றார். திரு அவையின் முதலாவது திருச்சங்கமாகக் கருதப்படும் எருசலேம் திருச்சங்கம் (திரு. பணி. 15.) ஒன்றிப்புக்கு ஓர் சிறந்த முன்னுதாரணமாகும். திரு அவையின் உறுப்பினர்களிடையே முரண்பாடுகள் தோற்றம் பெற்ற போது அதைத் தொடக்கத் திருஅவையானது அணுகிய முறையானது ஒன்றிப்புக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகக் காணப்படுகிறது. அவர்கள் தூய ஆவியின் வழிகாட்டலில் ஒன்று கூடுகிறார்கள், விவாதிக்கிறாா்கள், செபிக்கிறார்கள், தீர்மானம் எடுக்கிறார்கள். "இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் உங்கள் மேல் சுமத்தக்கூடாது என்று தூய ஆவியாரும் நாங்களும் தீர்மானித்தோம் (திரு.பணி. 15:28). இந்தக் கூட்டொருங்கத் தீர்மானம் திருஅவையின் பணிக்குப் பெரும் துணையாக இருந்தது.

**புனித பவுல்**

"உடல் ஒன்றே, உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்துவும் இருக்கிறார் ..." (1 கொரி. 12:12). திருஅவையானது கிறிஸ்துவின் திரு உடலாகத் திகழ்கின்றது: திருஅவையில் பலர் உறுப்புரிமை பெற்றுள்ளார்கள். பல இனத்தவர்கள், பல மொழியினர்கள், பல நிறத்தினர்கள், இவர்கள் அனைவரும் ஒரு மைப்பாட்டுடன் தலையாம் இயேசுக் கிறிஸ்துவோடு பயணம் செய்கின்றார்கள் (காண். 1 கொரி. 12:12-31).

திரு அவையிலே நற்கருணையானது ஒருமைப்பாட்டின் ஊற்றாகத் திகழ்கின்றது. நற்கருணையானது சமபந்திப் போஷனமாக விளங்குகிறது. திருமுழுக்கு என்னும் அருளடையாளத்தால் மூவொரு இறைவனால் அருட்பொழிவு செய்யப்பட்ட அனைத்துக் கத்தோலிக்கர்களும் திரு அவையில் சம மதிப்புப் பெறுகின்றனர்.

**ஒன்றிப்பின் ஆன்மீகம்**

(Spirituality of Communion)

இறைவனுக்கும் எமக்கும், எமக்கும் சக மனித குலத்திற்கும், எமக்கும் படைப்பிற்கும் இடையிலான ஒன்றிப்பின் தளமானது ஒன்றிப்பின் ஆன்மீகமாகக் கொள்ளப்படுகிறது. எனவே திரு அவையானது ஒன்றிப்பின் இல்லமாகவும், ஒன்றிப்பின் பள்ளியாகவும் விளங்குகிறது. எனவே மன, உளமாற்றமில்லாத அல்லது மற்றவர்களை வரவேற்று அவர்களுக்கு விழிப்போடு செவிமடுக்காத ஆன்மீகம் பொருளற்றதாக அமைகிறது. நம்பிக்கையின் நிறைவை (sensus fidei) முதிர்ச்சி நிலைக்கு நாம் கொண்டு செல்வதற்கு ஒன்றிப்பின் ஆன்மீகம் அவசியமாகிறது. நடைபெற இருக்கின்ற மாமன்றத்தின் மனநிலைக்கு மக்களை அழைத்துச் செல்வதற்கு இவ் ஆன்மீகம் தேவையாகிறது. தொடக்கத் திரு அவையின் நற்கருணை வாழ்வு முறையானது ஒன்றிப்பின் ஆன்மீகத்திற்கு ஊற்றும் கொடுமுடியுமாக விளங்குகிறது. எனவே திருப்பலி விருந்தின் பின்வரும் கூறுகள் இந்த ஒன்றிப்பின் ஆன்மீகத்திற்கு எம்மை இட்டுச் செல்கின்றன:

**அ.மூவொரு இறைவனைக் கூவியழைத்தல்**

நற்கருணைப் பலியானது மூவொரு இறைவனைக் கூவியழைப்பதோடு ஆரம்பமாகிறது. தந்தையாம் இறைவனால் ஒன்று கூட்டப்பட்டு தூய ஆவியின் அருட்பொழிவால் கிறிஸ்துவின் அருளடையாளமாகத் திருஅவை மாற்றமடைகிறது. "ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" (மத். 18:19). மூவொரு இறைவனின் பிரசன்னமானது ஒன்று கூடியிருக்கும் குழுமத்தில் இருக்கின்றது.

இக்குழுமமானது மூவொரு இறைவனை உண்மையிலும், பிறரன்பிலும் வாழவும், தூய ஆவியானவருடைய அருட்பொழிவால் பெற்றுக்கொண்ட வெவ்வேறுபட்ட அருட்கொடைகளை பொது நன்மைக்காகப் பயன்படுத்தவும் அழைக்கப்படுகிறது.

**ஆ. ஒப்புரவு**

இறைவனோடும் எம் சகோதர சகோதரிகளோடும் ஒப்புரவாவதன் மூலம் ஒன்றிப்பை வளர்த்துக்கொள்ள நற்கருணைப் பலி விருந்து உதவுகிறது. பாவத்தினூடாக உருவாக்கப்பட்ட பிரிவினையை இறைவனின் இரக்கத்தால் இணைக்க இவ்விருந்து வழிசமைக்கிறது. ஒப்புரவானது புதிய நற்செய்தி அறிவிப்பை வாழ அழைக்கிறது.

**இ.இறைவார்த்தைக்கு செவிமடுத்தல்.**

இறைவார்த்தைக்கு செவிமடுப்பதன் மூலம் எமது வாழ்க்கைப் பாதைக்கு ஒளி கிடைக்கிறது. இறைவார்த்தையை செவிமடுத்து, அருட்சாதனங்களைக் கொண்டாடி எமது சகோதர சகோதரிகளை, குறிப்பாக ஏழை எளியவர்களை வரவேற்க, அரவணைக்க நாம் முயற்சி எடுக்க வேண்டும். மற்றையவர்களுக்கு செவிமடுப்பதற்கு முன்னதாக நாம் இறைவார்த்தைக்கு முழுமையாக செவிமடுக்க வேண்டும்.

**ஈ. நற்கருணைப் பந்தி**

நற்கருணைப் பந்தியானது இறைவனோடும், எம்மோடும், சகோதர சகோதரிகளோடும் ஒன்றிப்பைப் படைக்கிறது. அத்தோடு ஒன்றிப்பைப் பாதுகாத்து வளர்க்கிறது. இப்பந்தியானது சமத்துவமான பந்தியாக அமைகிறது. ஒருவர் மற்றவருடைய மாண்பை மதித்து திருமுழுக்கு, உறுதிபூசுதல், திருநிலைகள், தூய ஆவியாரின் சிறப்பான அருட்கொடைகளால் எமக்குத் தரப்பட்ட பணிகளைத் திறம்பட ஆற்ற எம்மை ஊக்குவிக்கிறது.

**உ. பணி**

நற்கருணைப் பலி விருந்து எம்மை பணி செய்ய உந்தித் தள்ளுகிறது. யார் யார் இப்பலி விருந்தில் பங்கு பெறுகின்றார்களோ அவர்கள் எல்லாம் தாம் பெற்ற மகிழ்வைத் தமது சக சகோதரர்களோடு பகிரப் பணிக்கப்படுகிறார்கள். இந்த ஆன்ம வாஞ்சையானது நற்கருணை விருந்தின் சக்தியிலிருந்து பிறப்பெடுக்கிறது.

**ஒன்றிப்பும் சமூக செயற்பாட்டியலும் உரையாடல் - பிற கிறிஸ்தவ சபைகள், பிற மதங்கள்**

திருஅவையானது வரலாற்றில் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டு பயணம் செய்கின்றது. எனவே நற்செய்தி அறிவிப்பானது உரையாடலை மையப் படுத்துகிறது. எமது சமூகத்தில் காணப்படும் அமைப்புகளோடு நாம் உரையாடல்களை உருவாக்குவதன் மூலம் ஒன்றிப்பை வளர்த்துக் கொள்ளலாம். சமூக அமைப்புகள் என்று நாம் கருதுபவை: பிற கிறிஸ்தவ சபைகள், பிற மதங்கள், அரசியல் அமைப்புக்கள், பிற இனங்கள், பிற மொழியினர், போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றோடு நாம் உரையாட வேண்டும்.

**சமூக, பொருளாதார, அரசியல் தளங்கள்**

மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் தளங்களில் நீதி, ஒருமைப்பாடு, அமைதியை ஏற்படுத்த ஒன்றிப்பின் வழியாக முயற்சி எடுக்க வேண்டும். எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவன் வெறுமனே தனி மனிதனை மாத்திரமல்ல அவன் வாழும் சமூகச் சூழலோடு..

(தொடர்ச்சி 05ம் பக்கம்)

# பக்குவமானவர்கள்

எதிர்பாராப் பிரச்சினைகளை மனித மனம் அடிக்கடி எதிர்கொள்ள நேரிடுகின்றது. அவை பல்வேறுபட்ட சூழல்களில் புதிய புதிய சந்தர்ப்பங் களில் எழுகின்றன. அவற்றை நேர்முறையில் எதிர்கொண்டு எதிர்நீச்சல் போடலாம் அல்லது கோழைத்தனமாகத் தப்பித்து ஓடலாம்.

எதிர்நீச்சல் போடுவது பொதுவாகக் கடின மாகத் தோன்றினும் உளவளரீதியாகப் பார்க்கை யில் எதிர்நீச்சல் போடுவதே ஆரோக்கியமானது. தப்பித்து ஓடுவதைத் தவிர்த்துக் கொள்வதே சாலச் சிறந்தது. நெருக்கீடுகள் அளவுக்கு அதிகமாகக் காணப்படும் பொழுது பாதுகாப்புக் கவசங்கள் அணியவேண்டிய தேவை ஏற்படுகின்றது. பதகளிப்பைக் குறைப்பதற்கு ஆழ்மனத்திலிருந்து எழுகின்ற உளப் பொறிமுறை உளக் கவசம் என்று கூறினார் உளவியலாளர் சிக்மன்ட் புறொயிட்.

பாதுகாப்புக் கவசத்தின் முதற்கட்டத்தில் அது ஒரு நோய்நிலையாகவே வெளிப்படுகின்றது. இந்நிலையிலுள்ளவர்கள் தமக்கு உளம் சார்ந்த பிரச்சினை இருக்கிறது என்றோ அல்லது உதவி தேவை என்றோ ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் உண்மையைத் தரிசனம் செய்யாது, நிஜமாக வாழாது கற்பனை உலகில் சஞ்சரிப்பார் கள். எதிர்மறைச் சிந்தனையே அவர்களை ஆட்கொண்டு வழிநடத்தும். மன வளர்ச்சி குன்றிய நிலையில்



இரண்டாம் கட்டமாகப் பாதுகாப்புக் கவசம் அணியப் படுகின்றது. தமது பிழையை மறைப் பதற்காக மற்றவர்கள்மீது பழி போடுவது அல்லற்படுவது இவர்களுக்குச் சாதாரணம். மது, போதைப்பொருள் பாவனை போன்றவைக்கு அடிமையாகித் தங்களை நியாயப்படுத்தி, தொடர்ந்து போதைநிலையில் தாங்களும் துன்புற்றுக் கொண்டு, மற்றவர்களின் மனங்களைக் காயப் படுத்தி வாழ்வார்கள். பயம், நெருக்கீடு, நம்பிக்கை யீனம், தளர்வு போன்ற உணர்வுகளால் ஆக்கிர மிக்கப்பட்டு அவதிப்பட்டு அழுது புலம்புவார்கள்.

மூன்றாம் மட்டப் பாதுகாப்புக் கவசங் களை அணிவோர் இடம்மாறிய வெளிப்பாடாக உணர்வுகளை வெளிக்காட்டுவர். முதலாளியோடு கோபப்பட வேண்டிய கணவன் வீடு வந்ததும் தனது மனைவியைத் தேவையில்லாமல் அடித்துத் தனது கோபத்தை வெளிக்காட்டுகின்றான். பதிலாக அவள் தனது பிள்ளையைக் கடுமையாகத் தாக்கு கின்றாள். இவ்வாறு இடர்பாடுகள் தொடர் கதையா கின்றன. எதிர்வினைத் தொடர் பாடலை நிற்பாட்ட முடிவதில்லை.

நாலாவது நிலையில் காணப்படும் பாது காப்புக் கவசங்கள் உளமுதிர்ச்சியுடையோரால் அணியப்படுபவை. நேர்நிலையில் வாழ்வினை எதிர்கொள்பவர்கள் மனப் பக்குவமுடையவர்களாய் ஆரோக்கியத்தோடு பிரச்சினைகளைச் சுகமாக எதிர்கொள்ளக் கற்றுக் கொள்கின்றார்கள். முரண் பாடு, பயம், சினம் போன்றவற்றைத் துணிச்சலோடு முறியடிக்க இந்நிலையில் வாழ்பவர்கள் ஆற்றல் பெறுகின்றார்கள். எதிர்வினை உணர்வுகளை முறியடித்து, மன்னிக்கும் மனப்பான்மையில் சிறந்து விளங்குவார்கள்.

**இவர்கள்**

**'நான் நிறைவானவன் – மற்றவர்கள் குறைவானவர்கள்',**
**'நான் நிறைவானவன் அல்ல மற்றவர்கள் நிறைவானவர்கள்',**
**'நான் நிறைவானவன் அல்ல மற்றவர்கள் நிறைவானவர்கள் அல்ல'**

ஆகிய மூன்று மனோபாங்குகளையும் வென்றவர்களாய்,

**'நான் நல்லவன் மற்றவர்கள் நல்லவர்கள்'**

என்ற மனோபாங்கினைத் தமதாக்கி வாழ்வதில் வல்லவர்களாய் காணப்படுவார்கள். அவர்களோடு பேசுவது, அவர்கள் பேசுவதைக் கேட்பது, அவர்களோடு உறவு கொள்வது பொது வாகப் பேரின்பத்தையே அனைவருக்கும் பெற்றுத் தரும். அவர்களுக்கு நிகர் அவர்களே என்ற நிலையை உறுதிப்படுத்தும்.

"பாதுகாப்பு, பாதுகாப்பு" என்று அலறாதீர் கள் என்று அறிவுரை கூறுகின்றார்கள் மனோதத் துவ நிபுணர்கள். பாதுகாப்பு, பாதுகாப்பு என்று அதை எண்ணி அலறும்வரை எந்த ஒரு பெரிய காரியத்தையும் செய்ய முடியாது என்று அச்ச மின்றி வாழுதலின் அவசியத்தை வலியுறுத்துகின் றார் டாக்டர் எம். எஸ் உதயமூர்த்தி. அநாவசிய மான வைக்கும் அநீதிகளுக்கும் பயந்து,ஒழிந்து வாழும்பொழுது உங்கள் மனோசக்தியை விரயமாக்குகின்றீர்கள். எனவே, அச்சத்தை முறியடிக்க,

**1. எதனால் அச்சத்திற்கு உள்ளாக்கப்பட் டீர்களோ அதனையே செய்ய ஆரம்பியுங்கள்.**

செய்ய இயலாது என எண்ணியது தொடர்ச்சி யான முயற்சியின் பின்னர் இலகுவாக்கப்படும். காலப்போக்கில் பயமான எண்ணங்கள் பயனற் றவை என்றும் ஆற்றலோடு தொடர்பில்லாதவை என்றும் புரியவரும். வீதியில் வலம் வரும் போதெல்லாம் வாகனம் அடிக்கும் என எண் ணியது வீண் பிரமையே. உதாரணமாக, கடலைக் கண்டு பயப்படுபவன் முதலில் குளத்தில் இறங்கிக் குளிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நீரைப் பற்றிய பயம் போய்விடும். இரத்தத்தைக் கண்டு மூர்ச்சையடைபவன் ஆரம்பத்தில் அவனுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்கான காரணத்தைக் கண்டுபிடிப் பதன் மூலம் அல்லது இரத்தத்தைக் காண்பதற் கும் மூர்ச்சையடைவதற்கும் இடையேயுள்ள காரண காரியத் தொடர்பைத் தெரிந்து கொள்வதன் மூலம் தெளிவடைகின்றான்.

**2. எதிர்நீச்சல் போடுங்கள்.**

மனித வாழ்க்கைப் பிரச்சினைகள், மோதல்கள், சோதனைகள், வேதனைகள் போன்றவை ஆதிக் கம் செலுத்தும் ஒன்றாகவே விளங்குகின்றது. எனினும் சலிப்படையாது, சந்தோசத்தை அனு பவிப்பதற்கு எதிர்நீச்சல் போடுவது அவசியமா கின்றது. கோழை என்பவன் நாளாந்தம் இறந்து கொண்டிருப்பவனே. அவனுக்குச் சாவு என்பது ஏற்கெனவே ஆரம்பித்துவிட்ட ஒன்று. 'எனக்கு நிகர் நானே' என்ற ரீதியில் தனித்துவத்தை ஏற்று 'நான்' என்ற மமதை, ஆணவம்,திமிர் வாதம்,பிடிவாதம்போன்றவற்றைஅழித்து, மனித ஆளுமையை வளர்த்து, எந்தப் பயங்கரமான சூழலையும் எதிர்த்துச் சவால் போடக் கற்றுக் கொள்ளுங்கள். எதிர்த்தாக்கங்கள், ஏமாற்றங் கள் போன்றவற்றைக் கண்டு மனம் தளராது, அவற்றிற்கான காரணிகளை எதிர்த்து வெற்றி காண முயலுங்கள்.

**3.துணிச்சலான சிந்தனைகளை வள ருங்கள்.**

மதம் பிடித்த யானை துரத்தி வந்தால் என்ன செய்வது? மரம் முறிந்து விழுந்தால் என்ன செய்வது? உலகம் இப்பொழுது அழிந்தால் என்ன செய்வது? போன்ற பய உணர்வுகளால் பந்தாடப் படுவதிலிருந்து விடுபட முயற்சி எடுங்கள். நடக் காததை நடப்பதாகக் கற்பனை செய்து கலக்க முறுவதை விட்டு விடுங்கள். 'நன்மைகளைச் செய்வதே எனது இயல்பு', 'தீமைகள் என்னை ஆட்கொள்ள விடமாட்டேன்' போன்ற சிந்தனை

**அருட்பணி வின்சன் பற்றிக் (அமதி)**

களைத் துணிச்சலோடு நாளும் உங்கள் எண்ணங்களில் பதிவு செய்யுங்கள். நேரான எண்ணங்களே உங்களை ஆட்கொள்ளட்டும்!

**4. சுமைகளைக் களையுங்கள்.**

"சென்றுவிட்ட சுமைகளால் உங்கள் நினைவுகளைச் சுமைப்படுத்தாதீர்கள்" என் கின்றார் சேக்ஸ்பியர். எனவே, மனவேதனை தரக்கூடிய நினைவுகளை, மகிழ்ச்சி தரக்கூடிய நினைவுகளாலும் மனஅமைதி தரக்கூடிய நிகழ்வுகளாலும் நிரப்புங்கள். உங்கள் உள்ளக் குமுறல்களை, புதைந்து கிடக்கும் மனத் தாக்கங்களை நம்பக்கூடிய நல்ல நண்பர்களி டத்தில், நாணயம்மிக்க பெரியோரிடத்தில், பொறுப்புமிக்க பெற்றோரிடத்தில் வெளிப்படை யாகக் கூறுவதன்மூலம் மனஆறுதல் பெற முனையுங்கள்.

**5. நிகழ்காலத்தில் நடமாடுங்கள்**

"எதிர்காலத்தை நம்பாதே. அங்கே உன் கனவு- கள் பலிக்கும் என்பது நிச்சயம் அல்ல. இறந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படாதே. அது போய்விட்டது.

(தொடர்ச்சி 09ம் பக்கம்)

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும் பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கி யிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

09

### அத்தியாயம் 4



**பழைய வாழ்க்கை முறையையும் புதிய ஆலய ஆராதனைகளையும் சேர்த்து தமிழ்க் கிறிஸ்தவர்களின் சமாளிக்கும் கிறிஸ்தவம்**

**4.1 கிறிஸ்தவத்தை முழுமையாக வாழ முடியாத வேர்களைக் கொண்ட தமிழர்**

இந்து - சைவ வாழ்க்கை முறையிலிருந்து பிரிந்து, தமிழ் கிறிஸ்தவர்கள் எவ்வளவிற்கு கிறிஸ்தவ விசுவாசத்தை, வாழ்க்கை முறை முழுவதிலும் கடைப்பிடிக்க முடியுமென்பது எப்பொழுதும் கேள்வியாகவே இருக்கின்றது.

தமிழரின் இந்து - சைவ வாழ்க்கை முறை, தெய்வீக மத விழுமியங்களையும் உள்ளடக்கிய ஓர் வாழ்க்கை முறை என்பதை அப்போதைய மிசனரிகள் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் எல்லா மதங்களும் கிறிஸ்தவத்தைப்போல, விசுவாசக் கொள்கையையும் அமைப்பு கட்டுப்பாட்டையும், கொண்ட ஒரு மதமாகக் கருதி, சைவ வாழ்க்கை முறைகளை விட்டு விலகும்படி வேண்டினர். கோவிலையும் பூசாரியையும் விட்டு கிறிஸ்தவ கோவிலையும் மறைபோதகக் குருவை யும் பின்பற்றினால் போதும் என்றாற்போல் தோன்றியது. அது பிரச் சினையாகத் தோன்றவில்லை. ஆகையினால் தமிழர்கள் மதம்மாறினர் என்பதன் அர்த்தம் என்ன? அவர்கள் சைவக் கோவிலையும் பூசாரியை யும், திருவிழாக்களையும் விட்டு விட்டு, கிறிஸ்தவ ஆலயங்களையும் வழிபாட்டு முறைகளையும் பின்பற்றிக் கொண்டனர் என்பதே. இந்த மாற்றத்தின் வழியாகவே மீட்பு அடையலாமென நம்பினர்.

அத்துடன் மதம் மாறிக் கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களுக்கு, கல்வி காருண்ய உதவிகளும் கவர்ச்சியாகக் காத்திருந்தன.

மறைபரப்பாளர் கூறியது, ஓர் தந்திர உபாயமல்ல, அது அன்றைய கிறிஸ்தவத்தின் சந்தேகமற்ற நிலைப்பாடாகவே இருந்தது. அதாவது கிறிஸ்தவத்தின் ஊடாக மாத்திரமே மீட்பு (salvation only through the church ) என்ற மதக் கோட்பாடு.

அந்நிய மொழி பற்றிய பிரச்சினை காரணமாக, மறைபரப் பாளர் கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகளைத்தன்னும் புதிய தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு விளக்கிக் கூற முடியவில்லை.

சில தமிழ்ப் பொதுநிலையினரின் உதவியுடன் திரித்துவ சிலுவை அடையாளங்களையும் சிறு செபங்களையும் கற்பித்தனர். திரிதெந்தீன் சங்கத்தின் படிப்பினைகளைக் கொண்ட சிறிய குறிப்பிடம் எனும் கையேட்டிலிருந்து, சிலவற்றை மனப்பாடமாக்கக் கற்பித்தனர். அத்தோடு மோயீசன் வழியாக இறைவன் கொடுத்த 10 கற்பனைகளை யும், திரு அவையின் 6 கற்பனைகளையும், வழிபாட்டில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளையும் கற்பித்தனர். சுருங்கக் கூறினால், தமிழ்த் திருஅவையை உரோமைத் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் கிளை அமைப்பாகவும், கிறிஸ்தவர்களை அவ் அமைப்பின் அங்கத்தினராக வும் கருதி, படிப்பினைகளுக்கு அமைந்து நடப்பதே மீட்பின் வழி எனக் கற்பித்தனர்.

**4.2 ஆலயம் பூசாரி சடங்குகளை மையப்படுத்தி வாழ்ந்த தமிழர் மதம் மாறிய பின்பும் அதே கண்ணோட்டத்தில் கிறிஸ்தவ ஆலய வழிபாடுகளையும் நோக்கினர்.**

முன்பு ஆலய வாசலில் நின்று செபித்தவர்கள், தங்கள் காணிக்கைகளை வாசலில் நின்று பூசாரியிடம் ஒப்படைத்தவர்கள், சாதி வேற்றுமைகளை மதித்து நடைமுறைப் படுத்தியவர்கள், மத மாற்றத்தின் பின், கிறிஸ்தவ ஆலயங்களுக்குள்ளே அழைக்கப்பட்டு, மறை பரப்பாளரினாலும் தமிழ் உபதேசிமார்களினாலும், புதிய மதத்தை பற்றிய விளக்கங்களைப் பெற்றனர்.

செபங்கள் பாட்டுகள் பலிப்பூசைகள் எல்லாம் இலத்தீன் மொழி யிலே இருந்தன. இறைவார்த்தை அடங்கிய விவிலியம் தன்னும் இலத்தீன் மொழியிலேதான் இருந்தது. மறைபரப்பாளரினாலே மாத்திரம் வாசிக்கப் பட்டது. சிறுசிறு செபங்கள், பரலோக மந்திரம் அல்லது செபமாலை சொல்லுதல் - இவைகளை மாத்திரம் தமிழிலே செபிக்க விசுவாசிகள் கற்றுக்கொண்டனர்.

இந்து - சைவ பக்தர்கள் மனித வாழ்விற்கு உயிர் சக்தி கொடுக் கும் உணவு வகைகளைக் காணிக்கையாகக் கோவிலுக்கு எடுத்துச்சென்று பூசாரியாரிடம் ஆலய வாசலில் கொடுப்பர். அவைகளைப் பெற்று, பரிசுத்த மூலஸ்தான பீடத்தில் ஒப்புக் கொடுத்து விட்டு, வெளியில் காத்து நிற்கும் பக்தர்களிடம் திருப்பிக் கொண்டு வந்து கொடுப்பார். அதைப் பிரசாதமாக ஏற்று, தம்மைச் சேர்ந்த ஏனையோருடன் பகிர்ந்து கொள்வர்.

இந்தப் பின்னணியில் தான் தமிழ்க் கிறிஸ்தவர்களும், தமது ஆலயங்கள் கோவில்களையும், அங்கே நடக்கும் திருப்பலியையும் நோக்கினர். சைவக் கோவிலிலே பூசாரியார் புனிதமான மூலஸ்தானம் சென்று சமஸ்கிருத மொழியில் செபித்து, காணிக்கைகளை ஒப்புக் கொடுப்பது போல், கிறிஸ்தவ ஆலயத்தினுள்ளும் மறை போதகர் தலை யான பீடத்தில் இலத்தீன் மொழியில் திருப்பலியை கொண்டாடுவர். விசுவாசிகள் பார்வையாளராக மாத்திரம் இருந்து, செபமாலை ஓதுவர். காத்திருந்து நற்கருணையைப் பெற்றுக் கொள்ளும் நேரம் வந்ததும், பீடத்தின் முன் செல்வார்கள். *(தொடரும்...)*

# அன்பியத்தை வாழப் போட்டியிடு...

"தந்தை தனயனுள்ளும், தனயன்
தந்தையுள்ளும் ஒன்றானவர் போல்
அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக!"
ஆண்டவர் இயேசு முன்மொழிந்த
அன்பின் சாசன வரிகள் இவை.

அன்பர் இயேசுவை மூலைக்கல்லாக்கி
ஆவியின் அருட்பொழிவைப் பிணைப்பாக்கி
அழைப்பேற்ற சீடர்களைப் படிக்கற்களாக்கி
அன்பர் உடமைகளைப் பொதுமையாக்கி
அனைவரது நல்லெண்ணத்திற்குமுள்ளாக்கி
அழகுற மலர்ந்த சமூகமே ஆதித்திருச்சபை

திருத்தூதரின் திடன்மிகு போதனையிலும்
பிறர் நலம் நாடும் நட்புறவிலும்
அன்பைப் பகிரும் அப்பம் பிடுதலிலும்
இணைந்திருந்து இறையாட்சியைப் பரப்பிய
இல்லத் திருச்சபைக் குழுமமே அன்றைய அன்பியம்.

வேதமதில் பற்றுறுதியோடு வாழ்ந்தவர்களை
வேதகலாபனைகளும் அநீத பேதங்களும்
அலை அலையாய்ப் புரட்டியும்
நிலை குலையா நெஞ்சத்தினராய்
மலையென எழுந்த துன்பத்தையும்
தலைமேல் சுமந்து சரித்திரமாயினர்.

திருச்சபை வரலாறும், உலக வரலாறும்
மாற்றங்களால் மாற்றுருப் பெறுவது நிஜமே!
மாறாதிருப்பதோ மனங்களில் அன்பே!
விலையில்லாக் குருதியை விலையாக்கி
வித்துடல்கள் வீரகாவியம் படைக்க
புத்துயிர் திருச்சபையாய் பிறந்ததே அன்பியம்.

அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு
உலகப் பெருந்தகையின் பொன் வாக்கு
அன்புடையார் உயிரையும் துறப்பர் உனக்காய்
உலக இரட்சகரின் உன்னத சாட்சியம்
சிலுவையின் அன்பிற்குச் சான்றாகி - பிறர் துன்ப
நிலுவைகளகற்ற அன்பிய ஆயுதம் ஏந்திடுவோம்.

அன்பிய ஆண்டினை அர்த்தமாக்குவது
ஆக்கமிகு போட்டிகள் மாத்திரமன்று
அன்பிய வாழ்வு அழகுறு தியாகமென்றுணர
ஆதிக்கிறிஸ்தவரின் அன்புப்பணிகளை அடியொற்றி
ஆசியத் திரு அவையில் கூட்டொருங்கியமதை
ஆர்வமுடன் செயலாக்க எமை அர்ப்பணிப்போம்.

அன்பிய ஒளி அகங்களில் ஒளிரணுமெனில்
அயலவரின் நல்வாழ்வு கண்டு பொறாமையுறுவதை
அறச் செயல்களிலும் தற்புகழ்ச்சியடைவதை
இன, மத, சாதியத்தால் இறுமாப்படைவதை
இன்னுயிர்களை அழிக்கும் இழிவினைப் புரிவதை
இன்றே அகற்ற அணியாய்ப் போட்டியிடுவோம்.

மன்னுயிர்க்காய் தன்னுயிர் ஈந்த இயேசுவின்
தன்னிகரற்ற தியாகத்தைத் தரணியரும் வாழ
அகங்களில் அன்பை விதைத்தே - அயலவர்
சுகங்களில் துணையாகித் துக்கமதில் தூணாகி
ஒற்றுமை வாழ்வால் வேற்றுமை களைந்து
பற்றுடை அன்பிய சமூகம்
படைத்திடப் போட்டியிடுவோம்.

S.M.வுளோறன்ஸ்
(இளவாலை)

## கூட்டொருங்கியக்கம் பற்றி....

(03ம் பக்கத் தொடர்ச்சி) .....

அவனை மீட்க விரும்புகின்றார். ஒன்றிப்பானது அமைதியையும் நீதியையும் உருவாக்குவதன் மூலம் ஜனநாயக நிறுவனச் செல்வாக்கால் ஏற்படுத்தப்படும் தனியாள் அதிகாரக் குவிப்பியல் அரசியல், தொழில்நுட்ப மையப் பிறழ்வுகள் என்பவற்றால் தளமிடப்படும் சமூக அமைப்பியல் சார்ந்த தீமைகளை மேற்கொள்ள அழைக்கிறது.

### சமூக அக்கறை

ஒன்றிப்பானது எம் மத்தியில் வாழும் ஏழைகள் மட்டிலும், இப் படைப்பு மட்டிலும் எமக்குள்ள கடமையையும், பாதுகாக்க வேண்டிய உணர்வையும் தோற்றுவிக்கிறது. எமது பொதுவான இல்லம், ஒருமைப்பாட்டின் முதன்நிலை, நன்மைத்தனத்தின் குறிக்கோள், போன்றவற்றை மையப்படுத்தி சமூகத்தின் தெரிவுகளையும், திட்டங்களையும் ஒன்றித்து எடுக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

### நாம் சிந்திக்க வேண்டியவைகள்:

- இன்றைய திருஅவையில் ஒன்றிப்பு வாழ்வு எவ்வாறு அமைந்துள்ளது?
- இன்றைய எமது மறைமாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள அன்பியங்கள் எவ்வாறு ஒன்றிப்புக்குத் துணையாக உள்ளன?
- இந்த ஒன்றிப்புக்கு உள்ள சவால்கள் என்ன?
- பங்கு மட்டத்திலும் மறைக்கோட்ட மட்டத்திலும் இந்த ஒன்றிப்பு எவ்வாறு உள்ளது?
- சாதியம் என்னும் சவாலை எப்படி வெற்றி கொள்ள முடியும்?
- எமது பங்குத் திருஅவையில் ஒன்றிப்பை வளர்க்க நாம் எவ்வாறான முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும்?
- எமது பங்குத் திருஅவையில் ஒன்றிப்பை வலுப்படுத்தத் தடையாக உள்ள விடயங்கள் எவை என இனம் கண்டுகொள்ளவேண்டும். பின்னர் அவற்றை மேற்கொள்ள நாம் எடுக்கவேண்டிய படிநிலைகள் பற்றி ஆய்வுசெய்ய வேண்டும்.
- ஒன்றிப்பை வளர்க்க செவிமடுத்தல் எவ்வாறு பயன்படும்?
- கருத்துச் சுதந்திரம் ஒன்றிப்பை சிதைக்கிறதா? அவ்வாறெனில் எவ்வாறு மற்றவர்கள் கருத்துக்களை செவிமடுக்க வேண்டும்?
- குழும முரண்பாடுகளைக் கையாள நாம் எவ்வாறான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்?
- திரு அவை தான் வாழும் சமூகத்தோடு ஒன்றிப்பை எவ்வாறு உருவாக்கிக் கொள்ளலாம்?
- அன்றாடத் திருப்பலி ஒன்றிப்புக்கு எவ்வாறு பங்களிக்கின்றது?
- நாம் மேற்கொள்ளும் பணிகளில் ஒன்றிப்பை எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்?
- ஏனைய கிறிஸ்தவ குழுக்களுடன் எவ்வாறு ஒன்றிப்பை வளர்த்துக்கொள்ளலாம்?
- தேர்ந்து தெளிந்து கருமமாற்றலில் ஒன்றிப்பு எவ்வாறு கட்டியெழுப்பப்படலாம்?

**"ஒருமனப்பட்டு வாழ்வோம். ஒன்றாயிருந்து புதிய திருஅவையாக மிளிர்வோம்."**

### இறைவனுக்கான நேரம்

காலையில் எழுந்தவுடன் காலில் சக்கரமும், தோளில் இறக்கையும் கட்டிக்கொண்டு பறக்கின்ற வாழ்க்கைதான் பலருக்கும் என்றாகிவிட்ட ஓர் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இறைவனை வழிபடாத நாள், வாழாத நாள் என்கிறார் பெரியவர் ஒருவர். 24 மணி நேரத்தில் இறைவனுக்கு என்று நேரத்தை ஒதுக்குவோம். அது நமக்கானதாக இருக்கட்டும். இறைவனை வழிபட இந்த நேரமே உகந்த நேரம் என்று எண்ண வேண்டாம். வெற்று வாழ்க்கை அல்ல நமது வாழ்க்கை. இறைவனை சிக்கெனப் பிடிப்போம். பண்பட்ட நிலம் பயிர்செய்ய ஏற்றது என்பதைப்போல், பண்பட்ட உள்ளமே இறைவனுக்கு ஏற்ற உள்ளமாகின்றது. அப்படிப்பட்ட உள்ளம் நமதாகட்டும். எமது நாட்காட்டியில் இறைவனுக்கான நேரம் எவ்வளவு?

## 'திருமறை முத்துக்கள்'

நற்செய்தி அறிவிப்பானது திருமுழுக்குப் பெற்ற ஒவ்வோர் கத்தோலிக்கருடையவும் தலையாய கடமையாகும். திருஅவையின் திருமறைக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் இலகு நடையில் அறியக்கூடியவாறு 'திருமறை முத்துக்கள்' என்னும் நூல் அருட்பணி தே.யூட்தாஸ் அவர்களால் படைக்கப்பட்டுள்ளது. இந்நூலானது மிகவும் இலகு நடையில், வினாவிடை முறையில் திருஅவையின் மிகக் காத்திரமான மறைக்கல்விக் கொள்கைகளை விளக்கிய படைப்பாக அமைகிறது. சிறுவர்கள், வளர்ந்தவர்கள், மறையாசிரியர்கள், அருட்சாதனங்களைப் பெறுபவர்கள் என அனைத்துக் கத்தோலிக்கர்களும் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளது. எனவே, அனைவரும் அறிந்து மறையறிவில் வளம்பெற வாழ்த்துகிறோம். இந்நூலைப் பெற விரும்புபவர்கள் உங்கள் பங்குத்தந்தையர்களுடன் தொடர்புகொள்க.

அருட்பணி. தே. யூட்தாஸ்

### படைப்பின் தொடக்கம்

**1. யாரால் நீர் படைக்கப்பட்டுள்ளீர்?**
இறைவனால் நான் படைக்கப்பட்டுள்ளேன்.

**2. ஏன் கடவுள் மனிதனைப் படைத்தார்?**
தன்னை அறியவும் அன்பு செய்யவும் இவ்வுலகில் தனக்கு சேவை செய்யவும் மறு உலகில் தன்னோடு முடிவில்லா மகிழ்வில் இணைந்திருக்கவும் இறைவன் மனிதனைப் படைத்தார்.

**3. யாருடைய சாயலிலும் பாவனையிலும் இறைவன் உம்மைப் படைத்துள்ளார்?**
இறைவன் தன்னுடைய சாயலிலும் பாவனையிலும் உம்மைப் படைத்துள்ளார்.

**4. இறைவனின் சாயல் மனிதனின் உடலிலா அல்லது ஆன்மாவிலா உள்ளது?**
இறைவனின் சாயல் முதன்மையாக மனிதனின் ஆன்மாவில் உள்ளது.

**5. எவ்வாறு உம்முடைய ஆன்மா இறைவனைப் போலாகின்றது?**
என் ஆன்மா இறைவனைப் போலாகின்றது எவ்வாறெனில் இது ஆவியாயிருக்கிறது, முடிவில்லாத் தன்மை கொண்டதாயிருக்கின்றது.

**6. உம்முடைய ஆன்மா முடிவில்லாத் தன்மை கொண்டது என நீர் கூறும் போது நீர் வெளிப்படுத்தும் உண்மை என்ன?**
நான் வெளிப்படுத்தும் உண்மை யாதெனில் என் ஆன்மா ஒரு போதும் சாகும் தன்மையற்றதாக இருக்கிறது என்பதாகும்.

**7. உமது உடல் மட்டிலா அல்லது ஆன்மா மட்டிலா நீர் அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்?**
எனது ஆன்மா மட்டில் அதிக கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஆண்டவர் கூறுகின்றார்: "மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன? அவர் தம் வாழ்வுக்கு ஈடாக எதைக்கொடுப்பார் ? (மத் 16: 26).

**8. உம்முடைய ஆன்மாவை மீட்டுக் கொள்ள நீர் என்ன செய்ய வேண்டும்?**
என் ஆன்மாவை மீட்டுக்கொள்ள நான் இறைவனை நம்பிக்கை, எதிர்நோக்கு, பிறரன்பு என்ற புண்ணியங்களுடன் வழிபட வேண்டும். நான் இறைவனை நம்ப வேண்டும். என் முழு உள்ளத்துடன் அவரை அன்பு செய்ய வேண்டும்.

**9. நம்பிக்கை என்றால் என்ன?**
நம்பிக்கையானது இறைவன் எனக்கு தரும் அதிவிஷேட கொடையாகும். இது இறைவன் எமக்கு வெளிப்படுத்தியவைகளை சந்தேகப்படாது ஏற்றுக் கொள்ள உதவி செய்கின்றது.

**10. இறைவன் வெளிப்படுத்திய உண்மைகளை நீர் ஏன் நம்ப வேண்டும்?**
இறைவன் வெளிப்படுத்திய உண்மைகளை நான் நம்புவதற்குக் காரணம் இறைவனே உண்மையாக இருக்கின்றார். அவர் ஏமாற்றவோ ஏமாற்றப் படவோ கூடியவர் அல்ல.

**11. இறைவன் வெளிப்படுத்தியவற்றை எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?**
இறைவன்வெளிப்படுத்தியவற்றைவேதாகமத்தின் வாயிலாகவும், கத்தோலிக்கத் திரு அவையின் போதனைகளூடாகவும் (பாரம்பரியத்தினூடாகவும்), கத்தோலிக்க திரு அவையின் அதிகாரத்தினூடாகவும் அறிந்து கொள்ளலாம்.

**12. கத்தோலிக்கத் திரு அவைக்குக் கற்பிக்கும் அதிகாரத்தை வழங்கியவர் யார்?**
இயேசுக் கிறிஸ்து கத்தோலிக்கத் திரு அவைக்கு கற்பிக்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளார்: "எனவே, நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்" (மத். 28: 19). நம்பிக்கையின் உண்மைகள்

(தொடரும்....)

காவலன் கலசம்




# என் கேள்விக்கென்ன பதில்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணி ஞானசாரர் தேரரின் தலைமையில் உருவாக்கப்பட்டிருக்கின்றது! இதிலிருந்து அரச தலைவர்கள் சித்த சுயாதீனம் இழந்து விட்டார்கள் என்ற முடிவுக்கு வரலாமா?**

**ப:** ஐயோ ஆனந்தன்! எனக்கும் இந்தச் சந்தேகம் நிறைய நாட்களாக இருந்தது! யாரிடம் கேட்டு இதனைத் தீர்த்துக் கொள்ளலாம் என யோசித்துக் கொண்டிருந்தேன்! தெய்வம் போல நீங்களே ஒரு கேள்வியை எழுப்பி அக்கேள்வியில் என் சந்தேகத்திற்குத் தீர்வைத் தந்திருக்கின்றீர்கள்! நிற்க, இந்த 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற சுலோ பத்தினுள் 'ஒரே சமயம் ஒரே இனம்' என்பதும் மறைந்து கிடக்கின்றது என்பதை மறந்து போகக்கூடாது. இது விளங்காமல் கொஞ்சப் பரதேசிகள் இவ்வாறானவர்களுக்குச் சாமரம் வீசுவதைத்தான் தாங்க முடியவில்லை ஆனந்தன்!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கே: சேதனப் பசளை விடயம் எப்படி, எங்கு போய் முடியுமோ?**

**ப:** அன்ரன், சேதனப் பசளையின் விடயம் நிறைய சேதாரத்தோடதான் போய் முடியும் போல் தோன்றுகின்றது! சேதனப் பசளையின் மூலம் தானியங்களை உற்பத்தி செய்வது, தாவரங்களுக்குப் பசளையிடுவது மிக நல்லது. ஆனால், இவர்கள் அதற்கான முன்னாயத்தங்களையும் முன் தயாரிப்புக்களையும் செய்யாமல் கடைசியில் கஞ்சிக்குக் கையேந்துகின்ற நிலைக்கு மக்களைக் கொண்டுவந்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை! இப்போதே அரிசியின் விலை அல்லோல கல்லோலமாக இருக்கின்றது! இப்படியே போனால் அடுத்த ஆண்டு அரிசியின் விலை அரோகராதான்!

(மேரி, யாழ்ப்பாணம்)

**கே: 'ஒரு கூட்டொருங்கியக்க திரு அவைக்காக' என்ற புதியதோர் ஆயர்கள் மாமன்றம் 2023 ஒக்ரோபரில் உரோமையில் நடைபெற இருப்பதாக அறிகின்றோம். 'ஒரு கூட்டொருங்கியக்க திருஅவைக்காக' என்றால் என்ன?**

**ப:**திருஅவையில் அங்கம் வகிக்கும் எல்லோரும், யாரையும் வெளியே விட்டு விடாமல் அனைவரும் ஒன்றாய் இணைந்து அல்லது அனைவரையும் ஒன்றாய் இணைத்துக் கொண்டு ஆன்மீகப் பயணத்தைத் தொடரத் திருத்தந்தை இறைவனின் பெயரால் அழைப்பு விடுத்திருக்கின்றார். காரணம், ஒன்றிணைந்த திரு அவையாக அதாவது 'கூட்டொருங்கியக்கப் பாதையையே' இன்றைய திரு அவையில் இறைவன் விரும்புவதாக - எதிர்பார்ப்பதாகத் திருந்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைக்கின்றார்.

(ரதி, யாழ்ப்பாணம்)

**கே: நீதிமன்றத்தை அவமதித்த, வன்முறைகளைத் தூண்டிவிட்டதாகச் சொல்லப்படும் தேரரை 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற இச்செயலணியின் தலைவராக ஜனாதிபதி நியமித்திருக்கின்றார்! இந்நாட்டில் என்னதான் நடக்கின்றது! இந்நாட்டின் நிலை எப்படிப் போகப் போகின்றது?**

**ப:** ரதி, 'டிங்கிறி டிங்காலே மீனாச்சி டிங்கிறி டிங்காலே உலகம்(நாடு) போற போக்கப் பாரு தங்கமச்சில்லாலே!' என்பது போலத்தான் போகப் போகின்றது!

(அமலன், யாழ்ப்பாணம்)

**கே: 'கூட்டொருங்கியக்கம்' என்ற வார்த்தை வாய்க்குள் நுழைவதற்குள் ஆயர்கள் மாமன்றம் முடிந்துவிடும் போல் தெரிகின்றது! யார் இந்த வார்த்தையைக் கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை! கொஞ்சம் எளிமைப்படுத்தி இருக்கலாம் அல்லவா! வார்த்தையே விளங்கவில்லை என்றால், முன்னெடுக்கும் இச்செயற்பாடு சாதாரண மக்களுக்கு எப்படி விளங்கப் போகின்றது?**

**ப:** அமலன், 'கூட்டொருங்கியக்கம்' என்ற வார்த்தையை உச்சரிப்பது எனக்கும் ஆரம்பத்தில் கொஞ்சம் கஸ்ரமாகத்தான் இருந்தது! பிரசங்கம் சொல்லுவதற்காக ஓர் இரவு முழுக்கச் சொல்லிப் பழகி இப்போது வாயில் மட்டுமல்ல மனதிலும் பதிந்துவிட்டது! ஆங்கிலத்தில் 'சினடல்' (synodal) என்ற சொல்லுக்குத்தான் 'கூட்டொருங்கியக்கம்)' எனத் தமிழில் பயன்படுத்துகின்றார்கள். உண்மையில், தமிழில் உணர்த்தும் ஆழமான அர்த்தத்தை ஆங்கிலத்தில் காண முடியாது! தமிழில் உள்ள அநேகமான சொற்கள் அச்சொல் பயன்படுத்தப்படும் காரணத்தோடு சேர்த்துச் சொல்லப்படுவதால் அருமையான, ஆழமான அர்த்தத்தை தமிழ்ச் சொற்கள் கொண்டிருக்கின்றன. அப்படியான ஒரு சொல்தான் 'கூட்டொருங்கியக்கம்' என்ற சொல். இச்சொல்லில் 'கூட்டு', 'ஒருங்கு', 'இயக்கம்' ஆகிய மூன்று சொற்கள் இணைந்துள்ளன. 'கூட்டு' என்றால், திரட்டுதல் அதாவது மக்களைத் திரட்டுதல் - கூட்டிச் சேர்த்தல் அல்லது ஒரு செயற்பாட்டில் ஒவ்வொருவரும் தங்களின் பங்களிப்பைச் செய்தல்-செலுத்துதல் எனப் பொருள் கொள்ளலாம். 'ஒருங்கு' என்றால் ஒன்றாக அல்லது ஒன்றாய் வருதல் எனப்பொருள்படும். 'இயக்கம்' என்றால் சாரணர் இயக்கம், மாணவர் இயக்கம், போராடும் இயக்கம் போன்ற குழுக்களைக் குறிப்பதல்ல, மாறாக, ஒரு செயற்பாடு இயங்கு நிலையில் இருத்தல் அதாவது இயங்கிக் கொண்டிருத்தல் என லாம். மக்கள் அனைவரும் ஒன்றாய் வந்து ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பை நல்கிஇச்செயல்முறைப்பயணத்தில் ஈடுபடுவதைக் குறிக்கும்! அமலன், 'சாதாரண மக்களுக்கு விளங்குமா!' என்று கேட்பதை விட்டுவிட்டு சில நல்ல விடயங்களை நாமும் விளங்கிக்கொண்டு மற்றவர்களுக்கும் விளங்கப்படுத்த வேண்டும்! நான் சொல்வது முதலில் விளங்குகின்றதா அமலன்?

(மதி, யாழ்ப்பாணம்)

**கே: நீங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் சிறப்பாக பதில் அளிக்கின்றீர்கள். சரி, இக் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்! ஒரு சுவரைப் பத்துபேர் சேர்ந்து நான்கு நாள்களில் கட்டி முடிக்கின்றார்கள். அதே சுவரை நான்குபேர் சேர்ந்து கட்டினால் எத்தனை நாட்களில் கட்டி முடிப்பார்கள்?**

**ப:** மதி, சுவரைத்தான் பத்துப்பேர் சேர்ந்து நான்கு நாட்களில் கட்டி முடித்துவிட்டார்களே! பிறகேன், திரும்பவும் அச்சுவரைக் கட்டவேண்டும்! சரி, கட்டத்தான் வேண்டும் என்றால் எங்கு கொண்டுபோய் அச்சுவரைக் கட்டுவது! அங்குதான் சுவர் கட்டப்பட்டாயிற்றே! ஹா…ஹா…ஹா…

(லதா, யாழ்ப்பாணம்)

**கே பங்குத்தந்தையர்கள் இந்தக் 'கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக' என்ற செயற்திட்டத்தை ஆர்வத்தோடு முன்னெடுப்பார்கள் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?**

**ப:** சிவனே என்று சும்மா இருக்கின்ற என்னை சிக்கலில் மாட்டிவிடப் பார்க்கின்றீர்களா லதா அக்கா? ஏன் பங்குத்தந்தையர்கள் என் நண்பர்களாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா! நிற்க, நீங்களும் உங்கள் அனுபவத்தை வைத்துக் கொண்டுதானே இப்படியான கேள்வியைக் கேட்பீர்கள் என்பதால், சிக்காமலும் எனக்குச் சேதம் வராமலும் பதிலளிக்கப் பார்க்கின்றேன்! சில ஆண்டுகளாக 'அன்பியம்,'இப்போது'கூட்டொருங்கியக்கம்' போன்ற இச்செயற்பாடுகளைப் பங்குத் தளங்களில் எடுத்துக் கொண்டாலும் பங்குத் தந்தை பார்த்துக் கொள்வார் என அவரது தலையில் கட்டிவிட்டு பங்கில் உள்ள மற்றையவர்கள் தாங்களும் தங்கள் வேலையுமென இருந்துவிடுகின்ற நிலைமைகளைப் பொதுவாக அவதானிக்கலாம். சில விதிவிலக்குகளும் உண்டு! ஆனால்,

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

பங்கிலுள்ள எல்லோரும் கைகோர்த்து இச்செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை யாரும் இலகுவாகத் தட்டிக் களிக்கக் கூடாது, முடியாது! எனவே, 'கூட்டொருங்கியக்கச் செயல்முறைப் பயணத்தில்' நாம் எல்லோரும் சேர்ந்து பயணிக்கத் தீர்மானம் எடுத்தால் இப்பயணம் மிகுந்த கனிகொடுக்கும் ஒரு செயற்பாடாக மாறும்! மேலும், சில பங்குத்தந்தையர்கள்கூட ஏனோதானோ என்ற மனநிலையோடு செயற்பட மாட்டார்கள்! ஏனென்றால், 'கொரோனா லொக்டவுண்' காலத்தில் 'பங்குச் சந்தை' வெகுவாகப் பாதிக்கப்பட்டு மிக மோசமான நிலையில் இருக்கின்ற படியால் இம்முறை ஈடுபாட்டுடன் ஈடுபடுவார்கள் என நம்பலாம். அத்தோடு, பங்குத்தந்தையர்கள் இச்செயற்பாட்டில் - 'கூட்டொருங்கியக்கப் பாதைப் பயணத்தில்' மும்முரமாகச் செயற்பட்டு அவர்களோடு சேர்ந்து அனைவரும் ஒன்றாய் வந்து தம் ஒத்துழைப்பை வழங்கினால் 'கூட்டொருங்கியக்கப் பாதைப் பயணத்தின்' முழுப்பயனை எய்தலாம் என அறுதியிட்டுக் கூறுவேன்!

(ஜெயா, வவுனியா)

**கே: இன்றைய அரசியல் தலைவர்கள் நடந்துகொள்கின்ற விதத்தினை அவதானித்தால் நாடு ஆதாள பாதாளத்திற்குப் போய்விட்டதுபோல் தெரிகின்றது. வருகின்ற கோபத்துக்கு இவர்களை என்ன செய்யலாம்?**

**ப:** ஜெயா, முதலில், இவர்கள் எல்லோரையும் ஒரு விமானத்தில் ஏற்றுங்கள்! ஏன் இவர்களை விமானத்தில் ஏற்றும்படி சொல்கின்றேன் என யோசிப்பீர்கள்! காரணத்தைச் சொல்கின்றேன். ஒருதடவை ஒரு விமானத்தில் தம் நாட்டு அரசியல் வாதிகள் பயணம் செய்வதாக ஒரு விவசாயி அறியவந்தான். வானில் பறந்து கொண்டிருந்தபோது அவ்விமானத்தில்

**அருட்பணி செ. அன்புராசா**

இயந்திரக்கோளாறு ஏற்பட்டுமேற்சொன்ன விவசாயியின் வயலுக்கு அருகில் அவ்விமானம் விழுந்து நொறுங்கி விடுகின்றது. அவ்விடத்திற்கு வந்த பொலிசார் அவ்விவசாயியே கண்கண்ட சாட்சி ஆதலால் அவனிடம் விசாரணை மேற்கொண்டார்கள். அவன், "என் வயலுக்கு அருகில் விமானம் விழுந்து நொறுங்கியதால் நான் உடனடியாகவே செயற்பட்டு அவர்கள் அனைவரையும் அடக்கம் செய்துவிட்டேன்!" என்றான். விசாரணையை மேற்கொண்ட பொலிஸ் அதிகாரிகளின் ஒருவன், 'எல்லோரும் இறந்துவிட்டார்கள் என்று உனக்கு எப்படித் தெரியும்?' என அதிர்ச்சியோடு கேட்கின்றான். அவ்விவசாயி எவ்வித சலனமும் இல்லாமல், "அவர்களில் கொஞ்சப் பேர் 'நாங்கள் உயிரோடுதான் இருக்கிறோம்!' என அழுது புலம்பினார்கள்! ஆனால், அவர்களை நான் நம்பவில்லை! இந்த அரசியல்வாதிகளை உங்களுக்குத் தெரியும்தானே! சும்மா பொய் சொல்லுவார்கள்!" என்று விசாரணைக்கு முற்றுப் புள்ளி வைத்தான்!

## மனிதன் படைக்கப்பட்ட நோக்கம்

கிடைப்பதற்கு அரியதான கெழுபிறப்புடையனான
படைப்பினில் சிறந்த மனிதன். பயனுற வாழ்தல் வேண்டும்
உடைப்பெரு நலன்கள் யாவும் உயர்ந்தவன் அடையவேண்டும்
கடைப்படும் உயிர்களுக்கெல்லாம் காவலன் ஆதல் வேண்டும்

ஆளவேண்டும் மண்ணை - அரும்பல விலங்குகள் தம்மை
நீளவே இருக்கும் நீருள் - நிலைத்திடும் உயிர்க்கூட்டத்தை
சோலை வாழ் பறவை இனக் கூட்டத்தையும் பரிவுடன்
மேலவன் மனிதன் தானே மேலாண்மை புரிய வேண்டும்

அறிவினில் சிறத்தல் வேண்டும் - அன்பினில் நிலைத்தல் வேண்டும்
செறிவினில் உயரல் வேண்டும் - செம்மையில் மிளிர்தல் வேண்டும்
நெறியினில் எல்லாம் உற்ற நேர்மையை வளர்த்தல் வேண்டும்
சிறுமையைச் சிந்திக்காத - சீர்மையன் ஆதல் வேண்டும்

மனத்தினால் உயர்தல் வேண்டும் - மாண்புடன் வாழ வேண்டும்
இனத்தவர் பெருமை காக்க என்றென்றும் முயலல் வேண்டும்
சினத்தினில் மூழ்கிடாமல் நற்சிந்தனை பேணல் வேண்டும்
தினைத்துணையாவும் தீமைகள் சேராத தன்மை வேண்டும்

என்றென்றும் மனிதன் மண்ணில் - ஏற்றமே அடைதல் வேண்டும்
என்றிந்த வண்ணமெல்லாம் எண்ணிய இறைவன் தாமே
நன்றாற்றும் தன்மையாலே - நலன்களை எல்லாம் ஆய்ந்தார்
இன்று நாம் படைக்கும் மனிதன் எம்மைப்போல் ஆகவேண்டும்

தோற்றமும் இறைத்தன்மைத் தோற்றமே வேண்டும் என்று
தோற்றல் இல்லாத மேலோர் - தொடர்ச்சியாய் எண்ணி மகிழ்ந்து
ஆற்றல்சார் மனிதன் தன்னை ஆக்கி இங்கு உயர்த்துதற்கே
ஊற்றருள் மனநிலையோடு உறுதியான திட்டமதாய்

மனிதனே உயிர் தமக்குள் - மாண்புடையோன் என இறைவன்
தனிச்சிறப்பான எண்ணம் - தமக்குள் மூழ்கியவராக
மனிதனைத் தெய்வமாக்கும் மதிப்பு எல்லாம் தோன்ற
தனியனாக அன்றி ஆண், பெண் - தன்மையில் படைத்து வைத்தார்.

**வன்னிவாழ் இதயம்**

# பெரிதும் அறியப்படாதவரை அறிவோம்

புனித மடுத்தீனார் இறைமக்களிடையே பெரிய அளவில் அறியப்படாதவராக இருந்தாலும் இவருடைய புனித வாழ்வு தொடக்க காலத் திருஅவையின் காலத்தில் மிகவும் தாக்கம் செலுத்தியது. இள வயதிலேயே பொய்ற்றியஸ்சை சார்ந்த புனித கில்லறி என்கின்ற மடாதிபதியின் கண்காணிப்போடு ஆன்ம வாழ்வில் வழிநடாத்தப்பட்டு வந்தார். இவர் ஓர் படைவீரனாகவும் பிற்காலத்தில் பிரான்ஸ் நாட்டின் ரூர்ஸ் நகரத்தின் ஆயராகவும் பணிபுரிந்தார் என்பது நாம் பொதுவாக அறிந்த ஒன்றாகும். ஆனால் இக் கட்டுரையில் இவற்றையும் விட புனித மடுத்தீனார் எப்படிப்பட்ட குணாதிசயங்களோடு இருந்தார், அவருடைய நிர்வாகத்திறன், இரக்க மனப்பான்மை, ஆன்ம வாஞ்சை, அவருடைய பெயரால் நடந்த புதுமைகள் என்பவற்றை அவருடைய சுயசரிதையின் அடிப்படையிலே நாம் காணலாம்.

### வரலாற்றல் புனித மடுத்தீனார்

புனித மடுத்தீனாரைக் குறித்து நாம் அவருடைய சீடரான Sulpicius Severus சுல்பீசியஸ் செவரசின் எழுத்துக்களினூடாகப் பெரிய அளவில் அறியக்கிடக்கின்றது. சுல்பீசியசினுடைய எழுத்துக்களினூடாக புனித மடுத்தீனாரை அணுகவும், ஆராயவும் புனிதர்களான அகுஸ்தினார், யோண் கிறிஸ்தோத்தம் மற்றும் ரூரின் நகரத்து மக்சிமினுஸ் ஆகியோர் முயற்சி செய்தனர். புனிதமடுத்தீனாரால்கவரப்பட்ட சுல்பீசியல் செவரஸ் அக்காலத்தில் (Gaul) கோள் என்று அழைக்கப்பட்ட பிரான்சின் தெற்குப்பகுதியில் ஓர் துறவறமடத்தை நிறுவினார்.

பிறிமுலிசூக்கும் (Priuliacum) என்ற இடத்திலேயே இவர் புனித மடுத்தீனாரைக் குறித்துத் தனது எழுத்துக்களை எழுதினார் என்று நம்பப்படுகிறது. இவ் எழுத்துக்கள்

1. புனித மடுத்தீனாரின் தூய வாழ்வு
2, 3 கடிதங்கள்
3. இரண்டு உரையாடல்கள் ஆகியனவாகும்.

இவை அனைத்தும் கி.பி.404-406 ஆகிய காலப்பகுதிக்கு முன்னதாகவே எழுதப்பட்டு விட்டன. இதிலே புனித மடுத்தீனாரின் தூய வாழ்வு என்னும் எழுத்தானது மேற்கத்திலேயே முதன் முதலாக எழுதப்பட்ட புனிதர் வரலாறு ஆகும். இதுவே பிற்கால நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ சுயசரிதைகளில் அதிக தாக்கம் செலுத்தியதாக நம்பப்படுகிறது. தனது எழுத்துக்களில் சுல்பிசியஸ் செவரஸ் புனித மடுத்தீனாரை “இறை பிரசன்னத்தால் நிறைந்தவர்” என்று அடையாளப்படுத்த முயன்றார்.

புனித மடுத்தீனாரை முதலும் இறுதியுமான ஆன்மீக சக்தி என்றும் இறைவனோடு சேர்ந்து நடந்தவர் என்றும் தனது ஒறுத்தல்களாலும் ஏகாந்த வாழ்வாலும் தன்னை இறைவனோடு இணைத்தவர் எனவும், தீமைக்கு எப்போதும் அஞ்சாதவர் எனவும், திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள், மறை சாட்சிகள் ஆகியோரோடு ஒப்பிடக்கூடிய அளவில் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்திலே வல்லமையால் நிறைக்கப்பட்டிருந்தார் என்றும் கூறுகின்றார்.

இவர் பிறந்த இடம் தற்போது கங்கேரி நாட்டின் சொம்பாத்லே (Szombathely) என்ற இடமாகும். இவர் கி.பி. 336ம் ஆண்டு பிறந்தார் என நம்பப்படுகின்றது. இது தற்போதைய ஆஸ்ரிரிய - கங்கேரி எல்லைக்கு அண்மையில் காணப்படுகிறது. இவர் பின்பு இத்தாலி நாட்டில் பாவியா என்கிற இடத்திலே வளர்ந்தார். இவர் பிறப்பால் ஒரு இராணுவ வீரனின் மகனாவார். இதனால் இளம் வயதிலேயே இராணுவத்தில் இணைந்து கி.பி. (351) 5 வருடங்கள் பணியாற்றினார்.

கிறிஸ்தவத்திற்கு மனம்மாறி கி.பி. 354ம் ஆண்டு திருமுழுக்குப் பெற்றுக் கொண்டார். கி.பி. 356ம் ஆண்டு இராணுவத்தில் இருந்து விலகினார். இத்தாலிக்குத் திரும்பி ஜெனோவாவில் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த கல்வி நாரா தீவில் துறவியாகத் தனது நண்பனான இன்னொரு குருவுடன் இணைந்து கொண்டார்.

இவர் மீண்டும் பிரான்ஸ் நாட்டிற்குத் திரும்பி பொய்ரிஎர் நகரத்து மடாதிபதியான கில்லறியோடு தன்னை இணைத்துக் கொண்டார். கில்லறி ஆரியப் பேதகத்தின் தாக்கத்தினால் நாடுகடத்தப்பட்ட நிலையில் இருந்ததால், இவரிடமிருந்து கீழைத்தேய துறவற முறைகளைக் குறித்து மடுத்தீனார் அறிந்து கொண்டார். பின்பு பொய்திஎர் நகரத்தின் வெளியே (Liguge) என்னும் இடத்தில் துறவறம் மேற்கொண்டார். இவருடைய புகழ் ஓர் தூய மனிதரென எல்லா இடமும் அறியப்படலாயிற்று. ஏறக்குறைய கி.பி. 371ம் ஆண்டு (Tours) ரூஸ் நகரத்து கிறிஸ்தவ மக்களால் அவர்களது ஆயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### வரையறைகளைத் தாண்டிய மனிதர்

ஆயத்துவப் பணிக்கு முற்பட்ட இவரது பணிக்காலம் வரையறைக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது. இவருடைய ஆரம்ப காலமும் தெளிவற்றதாக இருந்தது. அத்தோடு நல்ல கல்வியையும் இவர் பெற்றிருக்கவில்லை. பொதுவான தோர் படைவீரனாகப் பயிற்சி பெற்றிருந்தார்.

பகட்டான உடை அணியாதவராக, சிறப்பான குணங்கள் பெரிதும் அற்றவராக, ஏற்கனவே சிக்கல்களோடு இருந்த ஆயரின் கீழ் பணியாற்றியவராகவும், ஆயர் பணிக்கு முன்பு திருஅவை யின் அதிகாரப் படி நிலைகளில் ஒருபோதும் பணியாற்றாதவராகவுமே இருந்தார்.

பொதுவாக எல்லா நிலைகளிலும் பிரான்ஸ் நாட்டின் ஆயர்களில் இருந்து வேறுபட்டவராகவே இருந்தார். புனித மடுத்தீனாரை நீஸ் நகர ஆயராக அபிஷேகம் செய்ய ஒன்றுகூடிய பிரான்ஸ் நாட்டின் ஆயர்கள் விருப்பம் அற்றவர்களாகவே காணப்பட்டார்கள்.

### ஏழ்மையின் சிகரம்

புனித மடுத்தீனார் தனது ஆயருக்குரிய கொலுவில் அமர விருப்பம் அற்றவராகவே இருந்தார். ஆயர்களுக்குரிய மரியாதைக்குரிய பயணத்திற்காகத் குதிரையைப் பயன்படுத்தாமல் இவர் கழுதை ஒன்றையே தனது தேவைகளுக்குப் பயன்படுத்தினார். ஓர் சாதாரண தொழிலாளிபோல, கிராமத்தான் போல சாதாரண உடைகளையே அணிந்திருந்தார். ரூஸ் நகரத்தின் பேராலயத்திற்கு

**அருட்பணி ஆ.ஜஸ்ரின்**

அருகில் அமைந்துள்ள ஆயர் இல்லத்தில் தங்காது அந்நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள மார்மோதிஎர் (Marmoutier) என்ற இடத்தில் துறவற மடம் அமைத்து அங்கு தங்கினார்.

தேசாதிபதி மாஞ்ஙஸ் மக்சிமஸ் (Magaus Maximus) ஒருமுறை புனித மடுத்தீனாரை விருந்தொன்றிற்கு அழைத்திருந்தார். அப்போது மரியாதைக்குரியவகையில்ஒருகுவளையில்திராட்சை இரசம் இவருக்கு வழங்கப்பட்டபோது, குவளையை வழமையின்படி அரசனிடம் திரும்பக் கொடுக்காது தன்னோடு பயணத்தில் இணைந்திருந்த சக குருவானவருக்குக் கொடுத்து எளிமையாய் இருந்தார். இவ்வாறு வரையறைகளை உடைக்க எப்போதும் தயங்காத அஞ்சா நெஞ்சத்தவராக புனித மடுத்தீனார் இருந்தார். அத்தோடு கைதிகளாகச் சிறைப் பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்குமாறு தலைவர்களை வற்புறுத்திக் கொண்டிருந்தார்.

அமானுஷ்ய உயிர்களை எப்போதும் சந்திக்கக்கூடியவராக இருந்தார். குறிப்பாகச் சாத்தானை அடிக்கடி எதிர் கொண்டார். பலவேளைகளில் சாத்தான் இயேசுவைப்போலமாற்றுருவம்கொண்டு அவரை எதிர்கொண்டான். இருப்பினும் மடுத்தீனார் அதனை இலகுவில் அடையாளம் கண்டு கொண்டார். இவர் வானதூதர்களை, சாத்தான்களை, புனித மரியன்னையை, புனித அக்னஸ், புனித தெக்லா, புனிதர்களான பேதுரு, பவுல் என்போரை காட்சிகளாகக் கண்டார் என்று சொல்லப்படுகின்றது. குறிப்பாக இவருக்கு தொலை உணர்வு சக்தி இருந்தது. எதிர்காலத்தை எதிர்வு கூறக்கூடிய ஆற்றல் வாய்ந்தவராகவும் இருந்தார். மிருகங்களிடமிருந்தும், மனிதர்களிடமிருந்தும் சாத்தானை விரட்டக்கூடிய, மிகுந்த இறைவல்லமை உடையவராகவும், குறிப்பாக இறந்தோரை இறைவல்லமையால் உயிர்ப்பிக்கக்கூடியவராகவும் வல்லமை பெற்றிருந்தார்.



### இறை வல்லமையின் எடுத்துக் காட்டுக்கள்

மடுத்தீனாரைப் புனிதர் என்று நாம் பார்க்கும்போது மிகப் பல புதுமைகள், வல்லமையான செயல்கள் என்பவற்றைச் செய்தார் என சுல்பிசியஸ் செவறாஸ் தனது குறிப்புக்களில் தெளிவாகக் கூறுகின்றார். இதன் பயனாக இவரது புகழ் பல இடங்களுக்கும் பரவியது. ஒருமுறை சென்ஸ் (sens) என்ற இடத்தில் இயற்கை கோரத் தாண்டவமாடியது. மழை விடாது கொட்டித் தீர்த்துக் கொண்டே இருந்தது. ஆலங்கட்டி மழையினால் மக்கள் பெரிதும் அவதியுற்றார்கள். இப்பிரதேசத்து மக்கள் ஆயர் மடுத்தீனாரின் புதுமைகள் குறித்துக் கேள்விப்பட்டிருந்தபடியினால் அவரை அழைத்து அவரது செபத்தின் வல்லமையினால் மழையை நிறுத்தினார்கள்.

இவர் ஆயராக இருந்த காலத்தில் மிகவும் கடும்போக்கு உடையவராகக் காட்டப்பட்டாலும் அதிகாரத்தில் உள்ளவர்களோடு நல்ல தொடர்புகளைக் கொண்டிருந்தார். இதனால் இவரது நடவடிக்கைகளால் சஞ்சலங்களைச் சந்தித்தவர்களும் இவருக்கு எப்போதும் மரியாதை கொடுத்துவந்ததையும் நாம் காணலாம்.

### பணியின் உச்சம்

புனித மடுத்தீனார் தன்னை ஓர் ஆயராகக் கிராமப்புற மக்களை, குறிப்பாக பிரான்சின் (Gaul) கோள் பகுதி மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டுவரத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். இவருடைய அணுகுமுறைகள் நேருக்கு நேராகவும், கடுமையானதாகவும் இருந்தன. இருப்பினும் புற இன சமயச் சடங்குகளைக் கட்டங்களை இல்லாதொழிக்க மிகவும் பாடுபட்டு உழைத்தார்.

ஒருமுறை மடுத்தீனார் ஓர் பிறசமய வழிபாட்டிடம் ஒன்றிற்குத் தீ வைத்தார். அப்போது தீச்சுவாலைகள் அயலில் உள்ள வீடுகளுக்குப் பரவியது. இதனைக் கண்ட மடுத்தீனார் விரைவாகக் கூரைமீது ஏறி, அசுரவேகமாய் பரவி வந்த தீச்சுவாலையை எதிர்கொண்டு நின்றார். அப்போது அதிசயமாகக் காற்று வீசிய திசைக்கு எதிரே தீச்சுவாலைகள் சென்றன. இவ்வாறு காற்றிற்கும் சுவாலைக்கும் இடையே பெரும் யுத்தம் நடைபெறுவது போல இக்காட்சி இருந்தது. இறுதியாக நெருப்பு ஓய்ந்துபோனது. இவ்வாறு மிகவும் சக்தி வாய்ந்தவராகி புனித மடுத்தீனார் இருந்தார் என்று அவருடைய வாழ்க்கைக் குறிப்பு தெளிவாகக் கூறுகின்றது.

ஒரு நாள் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் இருந்த இடத்தில் அமைந்திருந்த கோவிலைத் தகர்த்து, அம்மக்கள் வழிபட்ட பெரிய மரமொன்றினையும் மடுத்தீனார் வெட்டிவீழ்த்தத் தொடங்கிய போது, அவ்விடத்து மக்கள் அவரின் இறைவல்லமையைச் சோதிக்கும் நோக்குடன் அந்தமரம் விழப்போகும் திசையில் மரத்திற்குக் கீழே நிற்கும்படி சவால் விட்டனர். எதற்கும் அஞ்சாத புனித மடுத்தீனார் சவாலை ஏற்று, மரம் விழும் திசையில் அதற்குக் கீழே நின்றார். வெட்டப்பட்டு முறிந்த மரம் தலைக்குமேலே விழவரும்போது அதனை நோக்கி சிலுவை அடையாளம் வரைந்தார். உடனடியாகவே மரம் வேறு திசையில் விழுந்தது. இதனைக் கண்ட மக்கள் திகைப்புற்றனர்.

### கட்டியெழுப்பினார்

புறமத வழிபாட்டிடங்கள் இருந்த இடங்களைப் புனித மடுத்தீனார் அழித்த போது, அந்த இடத்தில் உடனடியாகவே ஆலயம் அல்லது துறவறமடம் ஒன்றையும் கட்டியெழுப்பினார். இதனால் கட்டங்களைத் தகர்த்தவர் என்பது மட்டும் அல்ல. மாறாக, புதிதாக அமைப்பதும் அவரது பிரதான பணியாக அமைந்தது என்பதை அறியலாம். இவ்வாறு எரேமியா 1:10 “பிடுங்கவும் தகர்க்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும் நடவும், இன்று நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்” என்ற வார்த்தைகளை இவர் தமது வாழ்வாக்கினார் என்றும் காண்கின்றோம்.

புனித மடுத்தீனார் நல்ல ஆயனாக தமது அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்கு அடிக்கடி சந்திப்புக்களை மேற்கொண்டு, தனது குருக்களையம், இறை மக்களையும் சந்தித்து அவர்களது பணி மற்றும் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். இதனால் அவர் தமது ஆலயத்துப் பணிகளைச் சிறப்பாக ஆற்றக்கூடியதாக இருந்தது. இத் தரிசிப்புக்கள் தமது குருக்களை அறியவும், நல்ல தொடர்புகளைப் பேணிக் கொள்ளவும் வழிவகுத்தது.

இவ்வாறு புனித மடுத்தீனாரின் வாழ்வினை ஆராயும்போது இவருடைய பணியின் நோக்கம், என்ன என்ன சூழ்நிலைகளில் எவ்வாறான மனநிலைகளோடு நல்லாயனாகப் பணியாற்றினார் என்ற தெளிவு நமக்குக் கிடைக்கின்றது. நற்செய்தியைப் பறைசாற்ற அழைக்கப்பட்டுள்ள நாமும் நுகர்வுக் கலாசார, அரசியல் பிரபல்யம், மூட நம்பிக்கை போன்ற நச்சுக் கரங்களால் உலகை, நம்மை, எம்மிடம் ஒப்படைக்கப்படிருப்பவர்களை அவற்றில் இருந்து விடுவிக்க புனித மடுத்தீனாரின் வாழ்வு நமக்கு அழைப்புத் தருகின்றது. மக்களைத் தேடும் நல்ல ஆயனாக இறைவல்லமை நிறைந்தவராக, எதற்கும் துணிந்தவராக, வரையறைகளை நற்செய்தியின் பொருட்டு உடைத் தெறிபவரான புனித மடுத்தீனாரின் வாழ்வு, பணி எமக்குச் சவாலாகட்டும்.

# காவலன் கலசம்

(சென்றவார 17.09.2021 தொடர்ச்சி )

# மனமாற்றம்
## ஓர் உளவளக் கண்ணோட்டம்

### நற்செய்தி

இயேசுவின் அழைப்பை மீண்டுமொரு முறை பார்ப்போம். "யோவான் கைது செய்யப்பட்ட பின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவுக்கு வந்தார். "காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்". என்று அவர் கூறினார். (மாற்கு 2:14-15) மனமாற்றத்தின் அவசியத்தையும், அவசரத்தையும் இயேசு கோடிட்டுக் காட்டினார்.

"காலம் நிறைவேறிவிட்டது". அதாவது உங்கள் நேரம் இப்பொழுது. இந்த நேரம். காலந்தாழ்த்தாதீர்கள். திக் நாட்கான் - நான் மதிக்கும் வியட்நாம் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்டு இன்று பிரான்ஸ் நாட்டை வதிவிடமாகக் கொண்ட பௌத்த குரு, Mindfulness என்ற பெயரில் இந்தச் செய்தியைத் தான் மேல் நாடுகளில் பரப்பி வருகிறார். கடந்த காலத்தில் வாழாது, எதிர்காலத்தில் வாழா, இந்த நேரத்தை, இக்கணத்தை வாழ்வதுதான் Mindfullness இக் கணத்தை வாழ்வதில்தான் அகவிடு தலை உண்டு.

### எனது நிலை

எனது வாழ்க்கையைப் பார்க்கும் பொழுது, நான் ஒன்றில் கடந்த காலத்தில் வாழ்ந்தேன். கடந்த காலத்தில் நான் செய்த தவறுகளை மீட்டு மீட்டு குற்றத்தில் குழம்பினேன். கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தத் தவிறியமைக்காக நிகழ்காலத்தில் வருந்தினேன். அன்றேல், கடந்தகால வெற்றிகளை, சாதித்தவைகளை நிகழ்காலத்தில் நினைந்து மகிழ்ந்தேன். அல்லது எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும், எப்படி வாழ வேண்டுமென்றும் கனவு-கள் கண்டேன். திட்டங்கள் தீட்டினேன். ஒட்டுமொத்தமாக எனது வாழ்க்கையின் பெரும்பாகம் ஒன்றில் கடந்த காலத்தில் அல்லது எதிர்காலத்தில் சஞ்சரித்தது. எப்பொழுதுமே நான் வாழக் கிடைத்த இந்த நேரத்தை இந்தக் கணப்பொழுதைத் தவறவிட்டு விட்டேன். இதே ஒரு பழக்கமாகி விட்டதால், நான் இப்படி வாழுகிறேன் எ ன்ற உணர்வே எனக்கு ஏற்படவில்லை. ஒரு வகையில் நான் இந்தப் பழக்கத்திற்குப் பெருமளவு அடிமையாகிவிட்டேன். இந்த அடிமைத்தனத்தில் இருந்து வெளிவருவது ஒரு பாரிய மனமாற்றம்.

### வந்தது சவால்!

இந்த நிலையில், எனது வாழ்க் கைக்குச் சவாலாக வந்தது, எக்காட் றொல் எழுதிய The Power of Now இதே ஆசிரியர் எழுதிய இன்னொரு நூல் Stillness Speaks இந்த இரண்டு நூல்களும் எனக்கு ஒரு புதிய கதவைத் திறந்தன போன்ற ஓர் உணர்வு.



இதற்கு மெதுகூட்டுவது போல வந்தது நான் பெரிதும் மதிக்கும் பௌத்த குரு திக் நாட்கான் எழுதிய Mindfulness இந்தச் சொல், சரியான அர்த்தத்தைக் கொடுக்கவில்லையென்று வாதிடுவோரும் உளர். Mindfulness என்ற சொல்லைத் தமிழில் மொழி பெயர்த்தால், "மன முழுமை" அல்லது "மனம் நிறைந்த" என்று பொருள்படலாம். ஆனால் நாம் உண்மையில் செய்ய வேண்டியது மனதை வெறுமையாக்கல். அதாவது பராக்குகள், சிந்தனைகள், எண்ணங்கள், சொற்கள், உணர்வுகள், கற்பனைகள் அனைத்திலுமிருந்தும் மனதை வெறுமையாக்கல். இது ஓர் ஆழமான மனமாற்றம். மனதை வெறுமையாக்குவது இரவோடிரவாக நடக்க முடியாது. ஒரு சில நாட்களிலோ, ஓரிரண்டு வருடங்களிலோ ஒரு நிறைவைக் காணாது. இது, ஒரு தொடர்ச்சியான மனமாற்றம். இதற்கு ஒரு பொறிமுறை தேவை. கட்டுப்பாடு தேவை. மனதிற்குப்

**கரைவையூர்ச் செல்வம்**

பிடித்தமான அத்தனையையும் செய்து கொண்டு, பல்வேறு திசைகளில் எனது மனதை ஓட விட்டுக் கொண்டு வாழும் ஒரு வாழ்க்கையால் மனத்தை வெறுமையாக்க முடியாது. மனம் ஒரு குரங்கு என்று சொல்வார்கள். அதன் பொருள் என்ன? குரங்கைப் போன்று நித்தமும் கொப்பு விட்டுக் கொப்புத் தாவும் மனதுண்டானால், மனதை எங்ஙனம் வெறுமையாக்குவது?

"இக்கணத்தை வாழ்" இதில்தான் வாழ்க்கையின் அர்த்தம் தெளிவாகும் என்ற சிந்தனை இந்திய யோகா பயிற்சியில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பல யோகிகளால் உறுதிப்படுத்தப்பட்டு வந்தாலும், பௌத்த வழியில் விப்பாசன ஜென் (zen), .... போன்றவற்றிலும் வழிகாட்டப்பட்டாலும், இன்றைய உலகில் அதுவும் சிறப்பாக மேற்கத்திய நாடுகளில் எக்காட் றொல் எழுதிய Power of Now ஒரு பாரிய தாக்கத்தை மக்களிடையே பரவலாக்கியது. இதனால் ஜோகா முறையும், வில்பாசன முறையும், ஜென் முறையும் பல நாடுகளில் புத்துணர்வு பெற்று ஆயிரக்கணக்கான மக்களை ஈர்த்துக் கொள்கின்றன. மதங்களில் எந்தவிதமான ஈடுபாடும் கொள்ளாதவர்களும் இந்த மேற்கூறிய பயிற்சி முறைகளை நாடிச் சென்று பயன்பெறுவது உள்ளங்கை நெல்லிக்கனி போன்று தோன்றுகின்றது.

### இயேசு சொன்னாரா?

இப்படிப்பட்ட ஒரு முக்கியமான செய்தியை அதுவும் ஒருவருடைய ஆன்மீக வாழ்விற்கு வேண்டியதைப் பெரும் ஞானியான இயேசு சொல்லாமல் இருப்பாரா? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். உட னேயே சில நற்செய்தி வாசகங்கள் ஞாபகம் வந்தன.

"விழிப்பாயிருங்கள்: ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவாரென உங்களுக்குத் தெரியாது" (மத்.24:42) என்று தனக்கே உரிய பாணியில் இயேசு சொல்லியுள்ளார். ஒவ்வொரு கணமும் விழிப்பாயிருங்கள். ஆமாம், எப்பொழுதுமே விழிப்பாயிருங்கள்! தூங்கி விடாதீர்கள், கடவுள் அனுபவம் (அல்லது ஒரு தெய்வீக அனுபவம், அன்றேல் ஓர் அகவிடுதலை அனுபவம், அன்றேல் ஒரு பத்திமைய உணர்வு- இதை ஆங்கிலத்தில் Numi Nows அனுபவம் என்றும் கூறுவார்கள். இது ஒரு தெய்வத்தன்மையுடைய அனுபவம் என்றும் கூறலாம்) எப் பொழுது வரும், எந்த நாளில் வரும், எந்த நேரத்தில் வரும், எந்த இடத்தில் வரும் என்பது உங்களுக்குத் தெரியாது. புறத்தில் இருந்து யாராலும் இதைத் தெரிவிக்க முடியாது. இது கடவுளின் கொடை. இந்தத் தெய்வ அனுபவம் உங்களுடைய கட்டுப் பாட்டில் இல்லை. உங்கள் வாய்ச் செபத்தினால் இந்த அனுபவத்தை வருவிக்க முடியாது. ஏன் உங்கள் ஆழ்மௌனத் தியானத்தாலும் வருவிக்க முடியாது.

ஆகவே எந்நேரமும் விழிப்பாயிருங்கள்! எந்நேரமும் திறந்த மனமுடையவர்களாக இருங்கள். இந்த முக்கியமான செய்தியை மேலும் விளக்குவதற்காக இயேசு ஓர் உவமையைச் சொன்னார். எந்த நேரத்தில்திருடன் வருவானென்று வீட்டுப் பொறுப்பாளருக்குச் சொல்லிவிட்டா வருவான்? ஆகவே, "விழிப்பாயிருங்கள்".

பிறிதோர் இத்தில் இயேசு சொன்னார் "உயிர்வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாதீர்கள். வானத்துப் பறவைகளை நோக்குங்கள்: அவை விதைப்பதும் இல்லை, அறுப்பதும் இல்லை : களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதும் இல்லை: கவலைப்படுவதால் உங்களில் எவர் தமது உயரத்தோடு ஒரு முழம் கூட்டமுடியும்? உடைக்காக ஏன் கவலைப்படுகின்றீர்கள்? காட்டு மலர்ச் செடிகள் எப்படி வளர்கின்றன எனக் கவனியுங்கள்: அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை... ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதீர்கள், ஏனெனில், நாளையை கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றுள்ள தொல்லையே போதும்.

நிகழ்காலத்தை இப்பொழுதை, இக்கணத்தை (Now) வாழ்வதுதான் முக்கியம் என்று சிந்திக்கும் பொழுதெல்லாம் இயேசுவின் வார்த்தைகள் ஞாபகம் வரும். இக்கணத்தை (The now) வாழுங்கள் என்று இயேசு மிகத் தெளிவாகச் சொல்லியுள்ளாரே! இதை ஏன் நாம் மறந்துவிட்டோம். திருஅவை இதை ஏன் வலியுறுத்தவில்லை?

ஐரோப்பிய நாடுகளிலும், வட அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் ..... விப்பாசன, ஜென் முறை நிகழ்வுகளை நாடிச் செல்லும் கிறிஸ்தவர்களுக்கு இந்த இயேசுவின் வார்த்தைகள் தெரியாது. திருஅவை தெரிவிக்கத் தவறிவிட்டது. இந்த இயேசுவின் வார்த்தைகளை அன்றாட வாழ்வில் வாழ ஒரு பொறிமுறையை உருவாக்க திருஅவை தவறிவிட்டது. இன்றும் தவறுகின்றது. புறத்தே ஒரு மதத்தை நிறுவவும், அந்த மதத்தை நிர்வகிக்கவும் முனைந்த திருஅவை இயேசுவின் இந்த வார்த்தைகளை மறந்து விட்டதா? அன்றேல் சௌகரியமாக மறுத்து விட்டதா?

(தொடரும்...)

# என்னதான் நடக்கிறது?

நெற்றி வியர்வை சிந்தி உழைக்கும் ஏழை வீட்டில்
பற்றி எரிய வேண்டிய அடுப்பு அணைந்தது ஏனோ?
சுற்றித் திரியும் சின்னஞ் சிறுசுகளுக்குக் கூட ஊட்டிட ஏதுமின்றிய
வற்றிய கிணறுகளாய் எம்மையும் மாற்றிடத் துடிப்பதேனோ?

எகிறும் விலைகளால் பதறுதைய்யா நெஞ்சம்
பகிரும் மனங்கள் எம்மவரிடையேயும் இல்லையே கொஞ்சம்
நகரும் வாழ்க்கையும் நகர சிரமப்பட்டு நிற்குதே - நகரில்
நுகரும் பொருட்களின் எகிறும் விலைகளால்!

சலங்கை இழந்த நடனமாதுவாய் நாடு தவிக்கையிலே
இலங்கையின் நங்கிக்கும் சுவிஸ் வங்கியில் எக்கவுண்டாம்.
விலங்கை மாட்டி அண்டை இழுத்து வர வேண்டாமோ?
கலங்கும் அண்ணன்மார் மனங்கள் என்று தயக்கமோ?

மொட்டில் வென்றவர்கள் பணவெறியரோ? ஏழையின்
தட்டில் உள்ள கொஞ்சத்தையும் வஞ்சித்துப் பறிக்க
வீட்டில் நின்றவர்கள் செய்வதும் தகுமோ? தமை நம்பியோர்
மட்டிலும் கொஞ்சம் கரிசனை காட்டிட வேண்டாமோ?

விரல்களைச் சுட்டிக் காட்டிடலாம் கள்ளக்கயவரில் - எம்
கறள்களைக் கொட்டித் தீர்த்திடலாம் என் கவிதையில்
குரல்களை உயர்த்திப் பேசிட எத்தணிக்கும் என் சாதியே
குறள் ஒன்றிலே சொல்லுங்கள் நீங்கள் செய்வதும் சரிதானா?

பூட்டிய வீட்டதன் நீண்ட தனிமையும்
காட்டிய காணொளி காட்சித் திரைகளும்
றோட்டிலே தான் கண்ட நேற்றைய காதலும்
போட்டி போட்டு வந்து நாசம் நிறைக்குதோ?

தோற்றமும் புறத்துத் தொழிலுமே காக்கின்றாய் ஆனால்
நாற்றம் மிகு சாதி வெறியை களைந்திட மறுக்கின்றாய்
மாற்றம் வேண்டுமென பதாகை ஏந்துகின்றாய்-
ஆனால் மாறாத்
தேற்றம் போல் வாக்கு சின்னத்தையும் மாற்றிடாதிருக்கிறாய்

கையை குலுக்கும் கலாசாரம் தனைக் கைவிட்டாய் நன்று - இரைப்
பையை உலுக்கும் புகை தனை விட மறுக்கிறாய் இன்றும்
பொய்யை உரைக்கும் அரசைத் தினம் கண்டிக்கிறாய் நன்று - உன்
மெய்யை சிதைக்கும் சாராயக் கடைக்கு
வசூல் கொடுக்கிறாய் இன்றும்

அடுத்தவனைத் தட்டிக் கேட்க நீ நல்லவனும் இல்லை - பகை
விடுத்தவனை சுட்டுத்தள்ள இப்போது பகலவனும் இல்லை
- அரசியலில்
நடிப்பவனை வெளியே அனுப்பிட தைரியசாலியும்
இல்லை-தேசத்திற்காய்
துடிப்பவனை உள்ளே ஈர்த்திடத் தேசப்பற்றாளனும் இல்லை

அருட்சகோ. லி.ஜெ.யேசுதாஸ்

## இலக்கற்ற வாழ்வு...

வீதியோரத்தில் இருக்கும் நாய் ஒன்று வருகின்ற எல்லா வாகனங்கள் பின்னாலும் வேகமாக ஓடிக்கொண்டே இருந்தது. இதைப் பார்த்த ஒருவன் அந்த நாயின் உரிமையாளரிடம், "என்ன இந்த நாய் வீதியில போகிற வாகனம் ஒன்றையாவது எப்படியும் பிடிக்கும் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார். அதற்கு நாயின் உரிமையாளர், "எனக்கு அதைவிட அந்த நாய் ஒரு வாகனத்தைப் பிடித்தாலும் அதை வைத்து என்ன செய்யப்போகிறது என்பதே கவலை" என்றார்.

இப்படித்தான் பலர் வாழ்வில் நாய் ஓட்டம் ஓடிக்கொண்டே இருக்கிறோம். காலை முதல் இரவு வரை வேலை வேலை என்கிறோம். நேரம் இல்லை என்கிறோம். ஏன் வேலை செய்கிறோம்? எதற்காக? எதை அடையப் போகிறோம்? என்ற தெளிவில்லாமல் உழைக்கிறோம். இலக்கில்லாப் பணிகளும், பயணங்களும் விழலுக்கு இறைத்த நீரென இனியாவது புரிந்து கொள்வோமா?

**இறைவனின் கரம் பிடித்து**
**இலக்கு நோக்கிப் பயணிப்போம்.**

# காவலன் கலசம்

அர்த்தமுள்ள ஆன்மீகம் 06

# இறை உறவே செபம்



அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

**இ**ந்த ஆன்மீக மறையுரைகள் தொடர் நிகழ்வாக வருவதால் இவற்றைத் தொடர்ந்து கேட்கும்போதே முழுப் பயனைப் பெறமுடியும். எனவே, தொடர்ந்து கேட்டுப் பயன்பெறுங்கள்.

கடவுள் இருக்கின்றாரா? கடவுள் எப்படிப்பட்டவர்? போன்ற வினாக்களை எழுப்பி, அவற்றிற்கான விடைகளைக் கண்டு உணர்ந்த நாம், இந்தக் கடவுளுக்கும் நமக்கும் இடையே உள்ள தொடர்பு என்ன? அதாவது செபம் என்றால் என்ன என்று சற்று சிந்திப்போம். இறைவன்தாமே முன்வந்து தம்மை மனிதராகிய எமக்கு வெளிப்படுத்தியதால் தான் நாம் அவரை அறியக்கூடியதாய் உள்ளது. இந்நிலையில் நமது தனி முயற்சியினால் இறைவனோடு தொடர்புகொள்ள முடியாது.

செபம் இறைவனால் மனிதராகிய நமக்குக் கொடுக்கப்பட்ட ஓர் அருங்கொடை. செபம் என்பது இறைவனோடு மனிதன் உறவுகொள்ள இறைவனால் கொடுக்கப்பட்ட ஓர் கொடையே. இரு மனிதர் ஒருவரோடு ஒருவர் உறவை ஏற்படுத்திக் கொள்ள அதை வளர்க்க கையாளும் உரையாடல் போன்றது. இரு மனிதர் தங்களிடையேஉள்ளஅன்புறவையும்தேவைகளையும்பிரச்சினைகளையும் பேசித் தீர்வுகாணப் பயன்படுத்தும் உரையாடல் போன்றது. இவ்வாறான உறவின் உரையாடலை இறைவனோடு நிகழ்த்துகின்றபோது அது செபமாகிறது.

அப்பா தந்தையே என்று இறைவனை அழைத்து உரையாடுவதன் மூலமாக செபத்தினூடாக இறையுறவை இயேசு பல இடங்களில் வெளிப்படுத்துகின்றார்.

செபத்தின் முழுமுதல் நோக்கம் இறை உறவை வளர்ப்பது. எனவே, செபம் என்பது இதய பூர்வமான உரையாடல். இதயம் கலத்தல். இறைவனுக்காக ஏங்குதல். இறைவனோடு நமக்குள்ள தொடர்பு இறுகும்போது வழிபாடு ஆழம் பெறுகிறது வாழ்வு அர்த்தம் பெறுகிறது. ஆண்டவரைச் சந்திக்கும் வேளையிலே மூண்டெழுந்து வருகின்ற உணர்வு அலை எது? அச்சமா? சிறுமையா? சினமா? அலுப்பா? கடமை என்ற கட்டாயமா? அசையாத நம்பிக்கையா? அன்பா? மகிழ்வா? இறைவன் எப்படிப்பட்டவர் என்று, இதயமாகிய திரையிலே ஓவியம் வரைந்து வைத்திருக்கின்றோமோ அதனை அடிப்படையாக வைத்தே அவருக்கும் நமக்கும் உள்ள தொடர்பு அமையும். நமது இதய ஓவியம் பெரும்பாலும் இறைவனை நல்லவராகக் காட்டுவதில்லை. புரியாத பருவத்தில் அவர் நமக்குப் புதிர்! புரிய வேண்டிய பருவத்திலே நமது குடும்பம், கல்வி, பண்பாடு, சமய உணர்வு போன்ற காரணங்களால் அவர் நமக்குப் பொல்லாதவராகத் தோன்றுகின்றார். பழைய ஏற்பாடு, மக்களினத்தை ஒறுப்பவராக, அச்சுறுத்துபவராக இறைவனைக் காட்டுகிறது. மண்ணகம் வந்த இறைமகனே கடவுளின் அன்பைத் தெளிவாகக் காட்டியுள்ளார். உண்மையில் இறைவன் நமது அன்புத் தந்தை மட்டுமல்ல தாயுமானவர். நல்லார்க்கும் பொல்லார்க்கும் வேறுபாடு கருதாமல் ஞாயிற்றின் ஒளியையும் மழையின் பொழிவையும் நல்குவர் (மத் 5:45). மந்தையிலிருந்து சென்ற ஆட்டுக்குட்டியைச் சிந்தை நொந்து தேடிச் சேஉத்து அணைப்பவர். உள்ளம் திருந்தி வந்த மகனை வெள்ளம்போல் அன்புடன் வீட்டுக்குள் அழைப்பவர். திருந்தாமல் நாம் செய்த தீமைகளிலிருந்து திருமுகத்தைத் திருப்பிக் கொள்கிறார் அவர் “அன்பு தீங்கினை நினையாது.” (1 கொரி 13:5) ஆண்டவர் நமக்கு அருகிலேயே இருக்கிறார். “கடவுள்நம்மோடு” (மத்2:23). நம்மீது ஆழ்ந்த அக்கறை உள்ளவர் அவர். “நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைநெகிழ்வதும் இல்லை” (யோவா). நாம் எப்படி இருக்கிறோமோ அப்படியே நம்மை ஏற்றுக்கொள்கிறார். “நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தன் உயிரைக் கொடுத்தார்.” (உரோ 5:8.)

இப்படிப்பட்ட இறைவனோடு நாம் எப்படிப்பட்ட உறவை வைத்துள்ளோம்? நம்மில் சிலர் இறைவனை, வணிகராகக் கருதுகிறோம். “அதனை நீ எனக்குக் கொடுத்தால், இதனை நான் உனக்குத் தருவேன்” என்று பேரம் பேசுகின்றோம். நம்மில் வேறு சிலரோ, கடவுளைப் பொம்மலாட்டக்காரராக நினைக்கிறோம். “ஏன் இப்படி என்னை ஆட்டி வைக்கிறாய்?” வேறு சிலரோ எந்நாளும் “இதைத் தா, அதைத் தா, தா தா” என்று கடவுளை வெறும் தாத்தாவாக்கியுள்ளோம். வேறு சிலர் உடல் வலி வந்தவுடன் மருந்துக்கு ஓடுவதுபோல பிரச்சினை வந்தவுடன் கடவுளே என்கிறோம்.

கட்டிளம் காளை ஒருவன் கன்னி ஒருத்தியைக் காதலித்தான். அவளோ அழகுக்கு அழகு சேர்ப்பவள். அவளும் இவனை நெஞ்சார நேசித்தாள். காதல் கனிந்தது. பெரியோர் இவர்களது திருமணம் பற்றிச் சிந்தித்தனர். அவளோ இரு கண்களும் பார்வையற்றவள். எனவே, பெரியோர் அவளிடம் “நீ பார்வை பெறுவதை விரும்புகிறாயா?” என்று கேட்டனர். அவளோ “இல்லை” என்றாள். அவர்களோ ஆச்சரியத்துடன் ஏன் என்று கேட்டனர். அவள் “நான் காதலிக்கும் கணவன் இப்படித்தான் இருப்பார் என நினைத்துக்கொண்டு இருக்கிறேன். பார்வை பெற்றபின் வேறு தோற்றமாய் இருந்தால் எல்லாமே ஏமாற்றமாகி விடும்” என்றாள்.

கண்களை மூடி வழிபாட்டில் கரைந்து மூழ்கும்போது கண்மூடித்தனமாகக் கடவுளைப்பற்றி இதுவரை பலர் எண்ணிக் கொண்டு இருக்கலாம். வெவ்வேறு வழிகளில் இறைவன் நம் கண்களைத் திறந்து உண்மை நிலையில் நம்மோடு உறவுகொள்ள விரும்புகிறாஉ. இசைந்து கொடுப்போமா?

தான் உருவாக்கிய உருவில் நம்மை மாற்றுகின்ற உயிராற்றல் நிறைந்த உறவை கடவுளோடு ஏற்படுத்துவோம் அவ்வுறவை அறாமல் காத்துக் கொள்வோம் அதை நாள்தோறும் வளர்ப்போம். இதுவே உண்மையான, உன்னதமான செபமாகும். ●




அருட்பணி ஜோசப் லியோன்

**ந**ம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்பது இறப்பு. வாழ்வுக்கு அழுத்தம் கொடுப்பது இறப்பு. வாழ்வின் உந்து சக்தியும் இறப்பு. நம் வாழ்வின் இலக்கின் தொடக்கமும் இறப்பே. இறுதி நாளில் இறப்பை எப்படி சந்திக்கிறோமோ அப்படி வாழ்ந்துள்ளோம் என்று பொருள். இறப்பை மன நிறைவோடு மன மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் மனிதன்,இவ்வுலக வாழ்வை ஆண்டவர் எதிர்பார்க்கும் விதத்தில் வாழ்ந்துள்ளான், புது வாழ்வுக்குத் தன்னை தயாரித்துள்ளான் என வெளிப்படுகிறது.

இயேசுவின் பார்வையில் இறப்பு ஒரு திருமுழுக்கு. புது வாழ்வின் தொடக்கம். இயேசு, ஒவ்வொரு சாவையும் வாழ்வின் உதயமாகக் கண்டார். இலாசரின் இறப்பு கடவுளின் மாட்சி வெளிப்படும் நிகழ்வாகக் காண்கிறார்.(யோவா 11'4) பன்னிரெண்டு வயதுச் சிறுமியை உயிர்பெறச் செய்தபோது, “விலகிப் போங்கள், சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்”( மத் 9 :24) என்றபோது, இறப்பை, புத்துயிர் பெற உறங்கி விழிக்கும் அன்றாட நிகழ்வாகக் காண்கிறார்.

எவ்வாறு இறக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அவ்வாறு வாழ வேண்டும். அமைதியாக, நிம்மதியாக, வேதனையின்றி,தனிமையின்றி சாக வேண்டுமென்றால், வாழும்போதும் அவ்வாறே வாழ வேண்டும். வாழ்க்கை எப்படியோ அப்படியே மரணமும். இறைவன் பாராட்ட, மனிதர் புகழ, உன் மனம் பெருமிதமடைய வாழ்ந்து கொள்.

மரணம் மகிழ்ச்சியாக இருக்கும். புது வாழ்வாக அமையும்.

## வாழ்ந்தாலும், இறந்தாலும்...!

வாழ்ந்தாலும், இறந்தாலும் நாம் ஆண்டவருக்கு உரியவர்கள் என்னும் பவுலடியாரின் வாக்கின்படி, இறந்தாலும் இவர்கள் இறைவனுக்கும், நமக்கும் உரியவர்கள் என்னும் நம்பிக்கையுடன் இறந்த விசுவாசிகளுக்காக சிறப்பாக மன்றாடுகிறோம். இறந்த விசுவாசிகளுக்காக மன்றாடும் பழக்கம் காலம் காலமாக திருச்சபையில் இருந்து வந்தாலும், அறிவியலாளர் ஐன்ஸ்டீனின் வருகைக்குப் பின் இந்த நம்பிக்கை அறிவியல் வழியாகவும் வலுப்பெற்றிருக்கிறது. இது ஒரு வியப்பான தகவல் தான். ஐன்ஸ்டீன் கிறித்தவர் அல்லர், ஒரு யூதர். இருந்தபோதிலும், அவரது ஒப்புமைக் கொள்கையின் தாக்கம் இறந்தோர் பற்றிய கத்தோலிக்கரின் பார்வையிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது ஒப்புமைக் கொள்கையின்படி காலமும், இடமும் நிலையானவை (absolute) அல்ல, மாறாக ஒப்புமைக்குரியவை (realtive). எனவே, உடலோடு வாழும் காலத்தில்தான் காலமும், இடமும் மனிதர்களைக் கட்டுப்படுத்துகின்றன. உடலைக் கடந்தபின், காலத்தையும், இடத்தையும் (time and space) நாம் கடக்க முடியும். எனவே, இறந்தவர்கள் உடலைக் கடந்தவர்களாதலால், அவர்கள் காலத்தையும், இடத்தையும் வென்றவர்களாகிறார்கள். எனவே, ஒருவர் இறந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆனாலும்கூட, அவருக்கு அது இன்று போலத்தான். நமக்குத்தான் இருபத்தைந்து ஆண்டுகள். எனவே, நாம் இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்தபின் அவருக்காக மன்றாடினாலும், அவருக்கு அது இறப்பின் நேரத்திலேயே பலன் கொடுக்கும். இதுதான் ஐன்ஸ்டீனின் தாக்கம். எனவே, என்றோ இறந்துபோன நம் உறவுகளை நினைந்து அவர்களுக்காக செபிப்போம். - **நன்றி:இணையத்தளம்**

## பக்குவமானவர்கள்...

( 04ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்காலத்தின் மீதுதான் உன் கவனம் இருக்க வேண்டும்” என்று வலியுறுத்தினார் லாங் பெல்லோ. எனவே, இறந்த காலக் கவலைகளோ அல்லது எதிர்கால ஏக்கங்களோ உங்களது நிகழ்காலத்தை நீறுபூத்ததாக மாற்றாதிருக்கப் பார்த்துக் கொள்ளுங்கள். அன்றாடப் பிரச்சினைகளை அன்றன்றே தீர்த்துக்கொள்ளுங்கள். ‘நாளை என்றோ அன்றேல் பிறகு செய்வம்’ என்றோ பின்போடுவதைப் பிற்போட்டுவிட்டு நிகழ்காலத்தில் நிஜமாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.

“ஒரேயொரு பாடல் நான் சொல்கின்றேன்:
மீண்டும் மீண்டும் முயலுங்கள்.
முதல் முறையில் தோல்வியா?
மீண்டும் மீண்டும் முயலுங்கள்”

என்று நினைவூட்டுகின்றார் வில்லியம் கிக்சன். எனவே, அச்சத்தை முறியடிக்க நாள்தோறும் முனையுங்கள். மனம் தளராது பின் வாங்காதீர்கள். எப்பொழுதும் உறுதியான சிந்தனைகளை உள்ளத்தில் வளருங்கள். வீரம் தெறிக்கும் வார்த்தைகளைப் பேசுங்கள். வாழ்க்கையில் ஏற்படும் எல்லா வகைப் பிரச்சினைகளுக்கும் நேர்முறையில் ஈடுகொடுத்து வாழ வேண்டும் என்ற உந்துகையின்மூலம் உறுதி பெறுங்கள்.

அமெரிக்க எழுத்தாளர் எழுதிய முதல்நாவலுக்கு ‘வாசிங்ரன் புத்தகப் பரிசு’ கிடைத்தது. பத்திரிகைகள் அதனை ‘ஒரே இரவில் வெற்றி’ என்று புகழ்ந்து எழுதின. அவரைக் கேட்டபொழுது அவர் சொன்னார்: “ஆமாம், இது இருபது வருட ஓர் இரவு வெற்றி” என்று. இருபது நீண்ட வருடங்கள் நாட்கூலியாக வேலை செய்துகொண்டே இரவில் தொடர்ந்து எழுதிவந்ததன் விளைவே அது.

வாழ வைக்கும் பண்புகளை வளரச் செய்யுங்கள்.
வளமாக்கும் வாய்ப்புக்களைப் பெருகச் செய்யுங்கள்.
வதைபடும் மக்களின் வலியை நீக்குங்கள்.
வாழ்வியலில் தினம் அரங்கம் அமையுங்கள்.

**வாழ்க்கை என்பது ஒருமுறைதான் வாழ்ந்து காட்டுங்கள்.**

# செயற்கை உரங்களை விடுத்து இயற்கைப் பசளையை விரும்புவோம்

அருட்சகோதரி நோமலா அன்ரனி (HC)



**உடனடிப் பலன் தரும் செயற்கை உரங்களை விட நீடித்த பலன் தரும் இயற்கைப் பசளையை விரும்புவோம்**

இயற்கைப் பசளை எனப்படுவது வீட்டுக்கழிவுகள், மனித விலங்குக் கழிவுகள், மரக்கறிக் கழிவுகள், கடதாசிக் கழிவுகள் போன்றவை ஒன்றாக சேகரிக்கப்பட்டு நீர், வளியுடன் நுண்ணங்கிகளின் பிரித்தழிதலுக்கு உட்பட்டு 1-3 மாதங்களில் தயாரிக்கப்படக் கூடியதாகும்.

செயற்கை உரங்கள், தாவர வளர்ச்சிக்குரிய குறிப்பிட்ட போசனைக்குரிய இரசாயனப் பொருட்களினால் குறித்த அளவு விகிதத்தில் உடனடியாக வர்த்தக நோக்கத்திற்காகத் தயாரிக்கப்படும் வகையைச் சேர்ந்தவை. செயற்கை உரங்கள் உடனடியாக விவசாயத்திற்குரிய உயர் விளைச்சலைத் தருகின்ற போதிலும் இதன் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் பல உள்ளன.

இயற்கைப் பசளைகள் அவ்வாறில்லை. இயற்கைப் பசளைகள் மண்ணிற்கு இடப்படும்போது மண்ணுக்கு எல்லா வகையான தாவரப் போசனைப் பொருட்கள் தாராளமாகக் கிடைப்பதுடன் மண்ணின் தன்மை, மண்ணின் கட்டமைப்பு, வளியடக்கம் நீரடக்கம், கடத்தும் தன்மை, பயிர்ச்செய்கைக்குரிய வளமான நிலை சமநிலைத் தன்மை, அடர்த்தி, ஈரப்பதன், நடுநிலையான PH என்பன இயற்கை நிலையில் பேணப்படுகின்றது. இதனால் செழிப்புள்ள நோயற்ற நோய் எதிர்ப்பு சக்தியுள்ள உணவுப் பயிர்களைப் பெறுவதுடன், சூழலையும் மாசடையாது பேண முடியும்.

செயற்கை உரங்கள் பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் போது மண்ணின் கட்டமைப்பு, தன்மை, அமில இயல்பு என்பன மாற்றமடைகின்றது. இதனால் மண்ணரிப்பு ஏற்படும்போது இலகுவில் மண்ணின் போசனைப் பொருட்கள் அடித்துச் செல்லப்படும்.

நமது சமூகத்தில் பாரம்பரிய முறைகளின்படி இயற்கைப் பசளைகள் மூலம் மண்ணைப் பதனிடுதலும், அவரை இனத் தாவரங்களைப் பயரிடுதல், பச்சை நிறத் தாவரப் பகுதிகளை மண்ணில் உக்கச் செய்தல், சுழற்சி முறைப் பயிர்ச்செய்கைகளைச் செய்தல் என்பன இன்றும் நடைபெறுகின்றன. ஆயினும் திடீரென வர்த்தக சந்தையில் இடம்பிடித்த செயற்கை உரங்கள் சொற்ப காலத்தில் கூடிய விளைச்சலைத் தந்து எம் விவசாயிகளை செயற்கை உரங்களுக்கு அடிமைப்படுத்தி விட்டன. இன்று செயற்கை உரங்கள் இல்லாமல் பயிர்ச்செய்கை செய்ய முடியாது போராடுகின்றனர்.

செயற்கை உரங்கள் உயிரியல் பிரித்தழிவுக்கு உட்படாத இரசாயனப் பொருட்களைக் கொண்டிருப்பதால் மண்ணிலிருந்து நீர் நிலைகளுக்குச் சென்று அங்கிருந்து நீர்வாழ் விலங்குகள், காட்டு விலங்குகள், பறவைகளுக்கு உணவுச்சங்கிலி மூலம் பரவலடைகின்றது. இவற்றின் மூலம் மனிதனுக்கும் இரசாயனப் பொருட்கள் கடத்தப்படுகின்றன. செயற்கை உரங்கள் விசிறப்படும்போது சூழலை மாசுபடுத்துவதோடு சிறு பிள்ளைகள், செல்லப்பிராணிகள் உடனடிப் பாதிப்புக்குட்படும் சந்தர்ப்பங்களும் உள்ளன. ஏனைய நன்மை பயக்கும் நுண்ணங்கிகளையும், மண்ணிலுள்ள சிறிய அங்கிகளையும் அழிப்பதால் மண்ணின் தன்மை, வளியடக்கம் மாறுபடுவதுடன் மண்ணின் வளமான இயல்பு குறைக்கப்படுகின்றது. அத்துடன் உயிரியல் பீடைகொல்லிகள் அழிக்கப்படுகின்றன. செயற்கை உரங்கள் விலை கூடியதாக இருந்தபோதிலும் உடனடி விளைச்சலுக்காக அதனை நாடும் விவசாயிகளின் அறிவுக் கண்கள் திறக்கப்படுமென எதிர்பார்க்கின்றோம்.

பல தீங்குகளையும், நோய்களையும், சுற்றாடலை மாசுபடுத்தலையும் ஏற்படுத்தும் இச்செயற்கை உரங்கள் புற்றுநோயைப் போல எம்மை அறியாமல் எமக்குள் ஊடுருவி கெடுதலை ஏற்படுத்துவதை எம் விவசாயிகள் ஏற்றுக்கொள்கிறார்களில்லை.

இயற்கைப் பசளைகள் மண்ணிற்கு இடப்படும் போது மெதுவாக அதன் போசனைப் பொருட்கள் சேர்க்கப்பட்டாலும் நீண்ட நாட்களுக்கு மண்ணை வளமுடைய தாக்கும். மண்ணினுள் அதிகளவான நுண்ணங்கிகளும், மண் வாழ் அங்கிகளும் காணப்பட்டு இவற்றின் செயற்பாட்டால் மண்ணின் தம்மை பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக மாற்றமடையும். இதனால் மண்ணில் (N.P.K) நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் போன்ற தாவர வளர்ச்சிக்குரிய போசனை மூலகங்களும், ஏனைய தாவர போசனை மூலகங்களும் அதிகரித்துத் தரமான விளைச்சலைத் தரக்கூடிய மண்ணாக மாற்ற மடையும்.

சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையினால் பீடைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. உயிரியல் பீடை கொல்லிகள் பயன்படுத்தப்படுவதால் செயற்கையான களைகொல்லி, பீடை கொல்லிகளின் பயன்பாடும் பக்க விளைவுகளும் தவிர்க்கப்படும். செயற்கை உரங்களைப் பயன்படுத்தும் போது இயற்கையான நுண்ணங்கிகளும், மண் அங்கிகளும் அழிந்து போவதால் இயற்கையான பீடை கொல்லிகள் அழிகின்றன. எனவே செயற்கையான பீடை கொல்லிகளைப் பயன்படுத்தி எம்மையும் எமது சூழலையும் இரசாயனப் பொருட்களால் நஞ்சூட்டிக்கொள்கிறோம்.

இயற்கைப் பசளை தயாரிக்கப்படுவதால் எமது அன்றாடக் கழிவுகள் வீணடிக்கப்படாமல் மீள் சுழற்சிக்குட்பட்டு பயன்படுத்தப்படுவதுடன் சூழல் மாசடையாது பேணப்படுகின்றது. அத்துடன் இயற்கைப் பசளைகளின் பயன்பாடு பச்சை வீட்டு விளைவு, பூகோள வெப்பமாதல் போன்றவற்றைக் குறை வடையச் செய்கின்றது.

இயற்கைப் பசளைகள் பிரித்தழிவுக்கு உட்படும் போது ஹியூமிக்கமிலம்(humicacid), அமினோ அமிலம் என்பவற்றை மண்ணிற்கு விடுவிக்கின்றது. இது மண்ணிலுள்ள பக்ரீரியாவின் பிரித்தழிப்பு செயன்முறையால் நிகழ்கின்றது. இதன் மூலமே மண் போசனை அதிகரிக்கின்றது. உயிர் உரம் என அழைக்கப்படும் ஹியூரிக்கமிலம் உருவாக 4, 5 வருடங்கள் தேவையாயினும் அதிகளவான N,P,K போசனைப் பொருட்களைக் கொண்ட படையாக நிலத்தினுள் காணப்படும் ஒரு இயற்கை வளமாகும். இயற்கைப் பசளைகள் ஒரு போதும் பயிர்களின் வேர்களை எரிவடையச் செய்வதில்லை. மாறாக வேர்கள் சிறப்பாக வளர்ச்சியடையச் செய்ய உதவுகின்றது.

ஆனால் செயற்கை உரங்கள் சரியான அளவில் பயிர்களுக்கு இடப்படாவிடில் பயிர்களின் வேர்களை எரித்துவிடும் தன்மை உடையவை. நிலத்தடி நீர் மாசடையவும் இச்செயற்கை உரங்கள் காரணமாகின்றது.

***எமது வாழ்வைச் சீரழிக்கும் செயற்கை உரங்களை விடுத்து எமது வாழ்வை மேலோங்கச் செய்ய இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்த எம் விவசாயிகளை வழிப்படுத்துவோம்.***

# சகல புனிதர்கள் விழாவும் இறந்த ஆன்மாக்கள் நினைவும்

இ.அ. அமலரட்ணம்

**முகவுரை**

கத்தோலிக்க திரு அவையில் கார்த்திகை மாதம் மிகவும் முதன்மையானது. இம்மாதத்தில் அனைத்துப் புனிதர்களின் விழாவையும், இறைபதமடைந்த சகல ஆன்மாக்கள் விழாவையும்நாம் கொண்டாடுகின்றோம். திரு அவையில் பல புனிதர்களுக்கு நாள் குறிக்கப்பட்டு விழாக்கள் கொண்டாடப்பட்டாலும் வருடத்தில் ஒரு முறையாவது விழா எடுக்கப்படாத புனிதர்களை நினைத்து அவர்களின் சாட்சிய வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றியோடு புகழ்பாடி, அவர்களின் பரிந்துரைக்காக மன்றாட இந்நாள் எம்மை அழைத்து நிற்கின்றது. அது போல இறைபதமடைந்த எமது அன்பு உறவுகளை, நாம் அவர்கள் இறந்த நாளில் நினைத்தாலும் யாரும் நினையாத, அந்தரித்த, செப உதவிகளை எதிர்பார்க்கும் உத்தரிப்பு நிலை ஆன்மாக்களுக்காக நாம் ஒவ்வொருவரும் செபிக்க கடமைப் பட்டிருக்கின்றோம். அதற்கான அழகான சந்தர்ப்பமே, இறந்த ஆன்மாக்கள் தினமும், கார்த்திகை மாதமுமாகும்.

**யார் இந்தப் புனிதர்கள்**

புனிதர்கள் கூட்டத்தில், இறைமகன் இயேசுவின் புனித கன்னி மரியாள் தொடங்கி திருத்தூதர்கள் உள்ளடங்களாக இளையோர் முதியோர் என்றவேறுபாடுகள் இன்றி பல்வேறு நிலைகளில் இறையாட்சிப் பணி புரிந்தவர்கள், சாதாரண மனிதர்கள் என்று நீண்டு செல்வதைக் காணுகின்றோம். இவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த போது இறைவனுக்கு விருப்பமான புனித வாழ்வு வாழ்ந்தவர்கள் - இறைமகன் இயேசுவைத் தமது வாழ்வின் மையமாகக் கொண்டு இறையாட்சிக்கு சான்று பகர்ந்து நின்றவர்கள். இறையரசு மலர்ந்து மனம் வீச வேண்டும் என்பதற்காக தமது இன்னுயிரைத்தியாகம் செய்தவர்கள். வாழ்வின் புனிதத்தைப் பேண வேண்டும் என்பதற்காக உயிரைத் துச்சமென மதித்து அதை இழந்தவர்கள். இவர்கள் இறைசந்நியில் குழுமமாக இறைபுகழ் பாடிக்கொண்டே இருக்கின்றார்கள்.

**புனிதர்கள் எமது வாழ்வின் மாதிரி**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் புனிதர்களைத் தன் வாழ்வின் மாதிரியாகக் கொள்ளமுடியும். அதனால் தான் நம் முன்னோர்கள் தமது பிள்ளைகளுக்குப் புனிதர்களின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்கள். தற்காலத்தில் இவ்வழக்கம் அருகிப் போனாலும் புனிதர்கள் எமது கிறிஸ்தவ வாழ்வுக்கு மிகவும் முதன்மையானவர்கள். நாம் இறைவனுக்கு ஆராதனை செலுத்துகின்றோம். புனிதர்களுக்கு வணக்கம் செய்கின்றோம். கத்தோலிக்க மரபின் படி புனிதர்களுக்குக் காட்டும் வணக்கம் வெறும் மரியாதை மட்டுமன்று அல்லது வேளாவேளை எழுப்பும் சிறு சிறு மன்றாட்டு மன்று. ஆழ்ந்த கிறிஸ்தவ விழுமியம் நிறைந்த ஞான உறவாகும். அவர்கள் எமக்கு முன் மாதிரிகையான வாழ்வும் சாட்சியமும், நம்மையும் வாழத் தூண்டுவதோடு, எமக்கு மகிழ்வான வாழ்வையும், தருகின்றது. என்று புனித 23ம் அருளப்பர் கூறுகின்றார். புனிதர்கள் மட்டில் நாம் காண்பிக்க வேண்டிய பக்தி எதில் அடங்கியுள்ளது எனில் அவர்களின் நல்வாழ்வின் முன்மாதிரிகையைக் கற்றுக் கொள்வதிலும். அவர்களுடன் தோழமை கொள்வதிலும் அவர்கள் நமக்காகப் பரிந்துரைப்பதைப் பெற்றுக் கொள்ள பேரவல் கொள்வதிலும் அடங்கியுள்ளது. எனவே புனிதர்களின் பரிந்துரையில் நம்பிக்கை கொண்டு வாழ்வோம்.

**மரணம் நிலை வாழ்வின் வாயில்**

புனிதர்கள் விழாவைத் தொடர்ந்து கார்த்திகை இரண்டாம் நாள் இறந்த அனைத்து விசுவாசிகளின் தினம் கொண்டாடப்படுகின்றது. "மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய் நீ மண்ணுக்கே திரும்புவாய்" என்ற வாக்கிற்கிணங்க மண்ணால் உண்டாக்கப்பட்ட நாம் மரணத்தின் பின் மண்ணுக்கே கையளிக்கப்படுகின்றோம். விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுகின்றதேயன்றி அழிக்கப்படுவதில்லை. மண்ணக வாழ்வின் உறைவிடம் அழிந்ததும் விண்ணகத்தில் ஒரு வீடு ஆயத்தமாக இருக்கின்றது. "உங்களுக்கு ஒரு இடம் ஏற்பாடு செய்யப்போகின்றேன் (யோ.14:02) என்ற இறைமகன் இயேசுவின் கூற்று உறுதிப்படுத்தப்படுகின்றது. எனவே மரணத்தின் பின் எமக்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிலைவாழ்வு எனும் மகிழ்வான இடத்தில் புனிதர்களின் தோழமையில் வாழ்வோம் என்பது விசுவாச சத்தியமாகும்.

**செபங்களில் நினைவு கூர்வோம்**

இறந்தவர்களுக்காக செபிப்பது கிறிஸ்தவ செயற்பாடுகளில் ஒன்றாகும். திருஅவை இறந்தவர்களுக்காக செபிப்பது வேதாகமத்தின் பாரம்பரியத்தின் அடிப்படையில் தான். செலூக்கிய ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சி செய்த யூதர்களுள் சிலர் இறந்த போது யூதா அவர்களுக்கு இளைப்பாற்றி கிடைக்க செபிப்பதாகவும் ஜெருசலேமில் பலி செலுத்தப் பணம் அனுப்பி வைப்பதாகவும் 2 மக்கபேயர் 12ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். எனவே எம்மோடு அன்புறவோடு வாழ்ந்து இறைபதமடைந்தோரை நினைத்து செபிப்பது எமது கடமையாகும். மேலும் நினைவு கூரப்படாத ஆன்மாக்களுக்காக செபிப்பதும் விசேட விதமாக தண்டனைக்காலம் முடிவுறாமல் உத்தரிப்பு நிலையில் துன்புறும் ஆன்மாக்கள் விண்ணகம் சேரமன்றாடுவதும் கட்டாயமானதுமாகும்.

**நிறைவாக**

இறந்த ஆன்மாக்களை நினைவு கூரும் இம்மாதம் முழுவதும் ஆன்மாக்களை நினைவு கூர்ந்து இரங்கர் திருப்பலிகள் ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம். குடும்பமாக ஒன்று கூடி திருச்செபமாலை வழியாக செபிப்போம். வேவையில் இனம் கண்டு இறந்தோரின் நினைவாக உதவிகள் செய்வோம். அத்துடன் கல்லறைத் தோட்டத்தை தரிசித்து எமது முன்னோர் அமைதியாகத் துயில் கொள்ளும் புனித மான இடம் என்பதை உணர்ந்து தூய்மையாகப் பேணுவோம். இறந்தோர் தினம் எமது மரணத்தையும் நினைவு படுத்து கின்றது என்பதையும் சகல புனிதர் தினம் எமது புனித வாழ்வுக்கு அழைப்பு விடுக் கின்றது என்பதையும் உணர்ந்து ஆன்மீக வாழ்வில் புனிதமாக வாழ்வோம்.

## விண்ணக வாழ்வின் 10ம் ஆண்டு நிறைவில்

மண்ணில்
07
.
10
.
1958



விண்ணில்
06
.
11
.
2011

AD 78

# அருட்பணி அ. சகாயதாசன்

"நன்று நன்று நல்ல ஊழியனே"

இறைவனின் பணிகள் செய்த
இணையிலாக் குருவே உந்தன்
மறை பணி ஆற்ற வாருமே
மக்கள் வருந்திடும் தொண்டா
மறைந்துமே சென்ற மாயம்?
மண்ணிலே விதைத்த நாற்று
நிறைவுடன் எழுந்து ஓங்கும்
நின்புகழ் உரைத்து வாழும்
நித்திய இளைப்பாற்றி
அளித்தருளும் ஆண்டவரே!
முடிவில்லா ஒளி
இவர் மேல் ஒளிர்வதாக!

ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி காலை 6.30 மணிக்கு
யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

*105, 3ம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்*
*குடும்பத்தினர்.*

---

## பிறப்பின் நினைவும் இறப்பின் 1ம் ஆண்டு நினைவஞ்சலியும்

மண்ணில்
10
.
11
.
1925



விண்ணில்
10
.
11
.
2020

அமரர்

# யக்கோப்பிள்ளை மடுத்தீனுப்பிள்ளை

*'உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்யப் போகிறேன்*
*உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்' (யோவான் 14:2–3)*

அன்பிற்கு அர்த்தம் சொல்லி
உயிராய் எம்மோடு கலந்து
பிள்ளைச் செல்வங்களை ஒன்றிணைத்து
எண்ணில்லா அன்புக்குப் பாத்திரமாய்
கரங்களுக்குள் எம்மை அணைத்து
உம் தேகம் தேய்த்து
எம்மைக் கரைசேர்த்த கண்ணியவனே
பிறப்பின் நாளை இறப்பின் நாளாக்கிச்
சென்றீரோ ஐயா!
ஓராண்டு ஆனாலும் உம் பிரிவுக் கடலில்
மூழ்கித் தவிக்கின்றோம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் 2021.11.10 அன்று 11.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

AD-77

4ம் வட்டாரம்,
எழுவைதீவு

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

---

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு

மண்ணில்
23
–
09
–
1937



விண்ணில்
13
–
11
–
2020

அமரர்

# சுவாம்பிள்ளை எற்வேட் கிறிஸ்ரி

ஆண்டவரின் இல்லத்தில்
என் வாழ்நாள் எல்லாம்
குடியிருக்க வேண்டும் [தி.பா.27:4]

AD 79

*இவரின் பிரிவால்*
*துயருறும்*
*குடும்பத்தினர்*

---

## விண்ணக வாழ்வின் 6ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18
.
09
.
1938



இறப்பு
18
.
11
.
2015

ஆண்டுகள் ஆறு ஆனதே – உம்
அன்பு முகம் காணாது
அவனியில் அவதரித்து அன்புடன்
ஆதரவு தந்து வாழ்ந்த தாயே
ஆண்டவன் அடியில் – நீர்
அமைதியாய்த் துயில் கொள்ள
அனுதினமும் வேண்டுகின்றோம்.

அமரர்

# திருமதி மெற்றில்டா சோதிமலர் இராஜசிங்கம்

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 18.11.2021ம் திகதி வியாழக்கிழமை புனித அடைக்கல அன்னை (OLR) ஆலயத்தில் காலை 5.45 மணிக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*368/ 3B* பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
கணவன், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

---

## விண்ணக வாழ்வில் 50ஆவது ஆண்டு நிறைவின் நினைவுகள்

மண்ணுலகிற்கு
26
-
09
-
1925



விண்ணுலகிற்கு
14
-
11
-
1971

அமரர்

# சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளை

" கிறிஸ்து இறந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்தது போலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். " (உரோ.6:5)

அரை நூற்றாண்டு
அமைதியாக மறைந்தது.........
நினைவுகள் மட்டும் ஏனோ.........
நிழலாய்த் தொடர்கிறது.........

விண்ணகத் தந்தையின் அருகிருந்து ..........
முகமுகமாய் தரிசித்து மகிழ்ந்திடுவீர்........
அவர் திருமுக ஒளியில் வாழ்ந்திடவே !
தினமும் செபங்களில் வேண்டிடுவோம்.

சென் . பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளில்.....
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

---

## ஏழாமாண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
01
.
08
.
1946



இறை அடியில்
09
.
11
.
2014

அமரர்

# யோசவ் பிரான்சிஸ் சேவியர்

"ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது"

அன்பே உருவாகி எங்களைப் பராமரித்துப்
பாதுகாத்த அப்பா!
ஆறமுடியாமல் ஏங்கித் தவிக்கின்றோம்
அந்த நாள் இன்றுபோல் – எம்
கண்களில் நிழலாடுகிறது
ஏழு ஆண்டுகள் என்ன – எமது
இறுதி மூச்சு இருக்கும் வரை
உங்கள் நினைவுகளுடன் வாழுகின்றோம்
இறைபதம் இன்புற்றிருக்கும்
நீங்கள் எங்களுக்காக
இறைவனிடம் வேண்டிடுங்கள்

AD-75

27/18,
புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்,

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

---

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25
.
11
.
1983



உதிர்வு
27
.
10
.
2019

அமரர்

# பாக்கியநாதர் பேரின்பநாதன்

[வவுனியா பறனாட்டாங்கண்டல்]

இரண்டு ஆண்டுகள் போனாலும்
ஆறாது ஆறாது எம் துயர்
பாசப் பறவை பறந்து விட்டதப்பா!
எங்களின் அன்புத் தந்தையாய்
பாசம் நிறைந்த தந்தையாய்
நல்லதொரு ஆசானாய்
பார்போற்ற வாழ்ந்து விட்டு
எங்கே அப்பா ஓடி மறைந்தீர்கள்?
எதுவுமே பேசாமல் போய்விட்டீர்கள்
இனி எப்போது உம் இனிய வதனம் காண்போம்
தனிமையாய் எம்மைத் தவிக்க விட்டு மறைந்தீர்கள்
கதறி நாங்கள் அழ துன்பத்தில்
எம்மைவிட்டுப் பிரிந்து விட்டாய்
உங்களின் உடலோடு இந்த வீடும் வெறிச்சோடிப் போனதே...

AD-76

பே.மேரி யூடிற்
தேவன்பிட்டி, மன்னார்

உம் பிரிவால் துயரத்தில் தவிக்கும்
மனைவி, பிள்ளைகள், உற்றார் உறவினர்

## பற்றிமா அன்னை காட்சி நாளில் பண்டத்தரிப்பில் யாழ். ஆயர் திருப்பலி



போர்த்துக்கல் நாட்டின் பற்றிமா பதியில் அன்னை கொடுத்த காட்சிகளில் இறுதிக்காட்சி இடம்பெற்ற தினத் திருவிழா கடந்த 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பண்டத் தரிப்பு புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கித் திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

## சர்வதேச உணவு தினம் வன்னியில் அனுஷ்டிப்பு




சர்வதேச உணவு தினம் கடந்த ஒக்டோபர் 16ஆம் திகதி சனிக்கிழமை அனுசரிக்கப் பட்டது. இத்தினத்தை முன்னிட்டு கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தின் உணவு பாதுகாப்பு செயற்திட்ட ஒருங்கிணைப்பின் இயக்குநர் அருட்திரு செபஜீவன் அடிகளின் தலைமையில் இத்தினத்திற்கான விசேட நிகழ்வு நேற்றைய தினம் அங்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு யேசுதாஸ் அடிகளின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியோடு ஆரம்பமான இந்நிகழ்வில் சமூகமட்டப் பயனாளிகள் பங்குத் தந்தையர்கள் தேசிய நிலையப் பணியாளர்கள் கியூடெக் வன்னி நிறுவன பணியாளர்கள் ஆகியோர் இணையவழி நிகழ்நிலை மூலமும் நேரடியாகவும் இணைந்துகொண்டனர். இந்நிகழ்வில் ஆரோக்கியமான உணவுப் பழக்கம் எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி அருமைநாதன் கருத்தமர்வினை நடாத்தினார். இதன்போது இந்நிகழ்விற்கு வருகை தந்தவர்களுக்குக் கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தினால் ஞாபகார்த்தமாகப் பழமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## முல்லைத்தளிர் இதழ் வெளியீடு



முல்லைத்தளிர் என்ற காலாண்டு சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலயப் பங்குப் பணிமனையில் பங்குத்தந்தை அருட்திரு A.அகஸ்ரின் அடிகள் தலைமையில் நடைபெற்றது. “நம்பிக்கையூட்டும் மறைக்கல்வி” என்ற தலைப்பில் ஆடி – புரட்டாதி மாத காலாண்டு இதழாக அமைந்த இச்சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு A.P. அன்ரனிப் பிள்ளை அடிகள் கலந்து சிறப்பித்து சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். இச்சஞ்சிகையின் முதற்பிரதியை ஆரோபணம் இளைஞர் இல்ல இயக்குநர் அருட்திரு எமில் ராஜேஸ்வரன் போல் அடிகள் பெற்றுக்கொள்ள இச்சஞ்சிகைக்கான மதிப்பீட்டுரையை புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய அதிபர் அருட்திரு A.றொபின்சன் அடிகள் வழங்கியிருந்தார்.

முல்லைத்தீவுப் பங்கு மறையாசிரியர் ஒன்றியத்தின் கன்னிப்படைப்பாக அமைந்த இவ்இறையியல் சஞ்சிகை மறைந்த நிரந்தர மறையாசிரியர் திரு ஆரோக்கிய நாதர் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்து வெளியிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு கோவிட் -19 சுகாதாார விதிமுறைகளுக்கு அமைவாக மட்டுப்படுத்தப்பட்ட பங்கேற்பாளர்களுடன் இடம்பெற்றது.

## இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மடத்தின் 125 ஆவது ஆண்டு விழா




போர்தோவின் திருக்குடும்பக் கன்னியர் துறவற சபையினர் இளவாலைப் பிரதேசத்தில் பணிகளை ஆரம்பித்து அங்கு துறவற மடத்தை நிறுவியதன் 125வது ஆண்டு நிறைவு விழா கடந்த 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு இளவாலை திருக் குடும்பக் கன்னியர் மடத்தில் நடைபெற்றது.

திருக்குடும்பக் கன்னியர் மட சிற்றாலயத்தில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தலைமையில் நன்றித்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுக் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நாளை சிறப்பிக்கும் முகமாக 125வது ஆண்டு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## நல்லாசிரியர் ஆன்மீகமும் ஆளுமையும் நூல் வெளியீடு




அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அமைதித் தென்றல் நிறுவன இயக்குநர் அருட்திரு அன்ரனி பொன்சியன் அடிகள் எழுதிய “நல்லாசிரியர் ஆன்மீகமும் ஆளுமையும்” எனும் நூல்வெளியீடு கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முல்லைத் தீவில் அமைந்துள்ள அமைதித் தென்றல் நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து நூலினை வெளியிட்டுவைத்தார். சிறப்பு விருந்தினராக யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண அமலமரித்தியாகிகள் சபை முதல்வரும் மற்றும் கல்விசார் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர். கோவிட்-19 சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக இந்நிகழ்வு இடம்பெற்றது.

## ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் மறைவின் ஐம்பது ஆண்டுகள் நிறைவை நினைவுகூர குருக்கள் மன்றத்தில் தீர்மானம்

1972ம் ஆண்டு இறைபதமடைந்த யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் முதலாவது சுதேச ஆயராகிய ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் மறைவின் ஐம்பது ஆண்டுகள் நிறைவை வருகிற 2022ம் ஆண்டு அர்த்தமுள்ள வகையில் நினைவுகூருவதற்கான பல திட்டங்கள் கடந்த 21-10-2021 வியாழக்கிழமை நடைபெற்ற ஆயர் தலைமையிலான யாழ். மறைமாவட்டக் குருக்கள் மன்றக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இதன்படி யாழ். மரியன்னை பேராலய வளாகத்தில் ஆயரின் திரு உருவச்சிலை ஒன்றை நிறுவுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. அத்துடன் ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் வாழ்வும் பணியும் பற்றிய விவரணப் படம் தயாரித்து வெளியிடுதல், ஆயர் பற்றிய ஆக்கங்களை பத்திரிகைகள் மற்றும் தொடர்புசாதனங்களில் பிரசுரித்தல், இவற்றின் அடிப்படையில் போட்டிநிகழ்வுகளை நடாத்துதல், மற்றும் ஆயரின் பெயரால் கல்வி அறப்பணி ஆரம்பித்தல் போன்ற செயற்பா டுகளை முன்னெடுக்கும் தீர்மானங்களும் குருக்கள் மன்றக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள் தற்போது மூன்று மறைமாவட்டங்களாகச் செயற்படுகின்ற யாழ்ப்பாணம், மன்னார், அனுராதபுரம் ஆகியவை ஒன்றிணைந்த யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயராக அரும்பணி ஆற்றியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 07ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.